Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 14 சனிக்கிழமை (28.03.2015) | பக்கங்கள் 20 | ஓசை - 179

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# அத்தியாவசிய சேவைகளை சீரமைக்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளை தாமதமின்றி சீரமைத்து நிறைவுசெய்யும்படி யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அவர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்று கையளித்தார். அதன் முழுமையான விபரம் வருமாறு,

• நிலத்தடிநீர் மோசமாகப் பாதிப்படைந்துவரும் யாழ். மாவட்டம் உட்பட குடிநீருக்குப் பாரிய நெருக்கடியைச் சந்தித்துவரும் வடமாகாணத்தின் மக்கள் அனைவருக்கும் பொருத்தமான பொறிமுறை ஊடாக சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும். சுன்னாகம் நிலத்தடிநீரில் கழிவு ஒயில் கலந்தமை சம்பந்தமாக அன்று எனது அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைவாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. (பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய

19 ஆம் பக்கம் பார்க்க

# மகிந்தவின் தோல்விக்கு காரணம் நாம் அல்ல

## பிரித்தானிய தூதுவர் தெரிவிப்பு



இலங்கையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னைத் தோற்கடிப்பதற்காக, பிரித்தானிய, அமெரிக்க, இந்திய புலனாய்வு அமைப்புகள் பணியாற்றியதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறிய குற்றச்சாட்டை, இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் நிராகரித்துள்ளார்.

பிரித்தானியாவின் எம்.16 புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட இந்திய, அமெரிக்க புலனாய்வுப் பிரிவுகள் மீது மகிந்த ராஜபக்ஷ சுமத்திய குற்றச்சாட்டுத் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன் ரன்கின்,

19 ஆம் பக்கம் பார்க்க

# பெண்கள் நலன்பேணும் செயலகம் வடக்கில் அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் நலன்களைக் கவனிப்பதற்கென விசேட தலைமையகம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க கலந்து கொண்ட முக்கிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்திற்கு 3 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் நேற்று கலந்து கொண்டார்.


யாழ். அரச செயலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் வடமாகாணத்தில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டிருக்கின்றது.

பெண்களைத் தலைமையாகக் கொண்டுள்ள குடும்பங்களின் நலன்கள் மற்றும் வாழ்வாதாரம், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், இந்திய மீனவர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

# குடிநீரில் நஞ்சுகலந்தது யார்? குற்றவாளிக்கு தண்டனை வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப்பாளர் கோரிக்கை



ஏழாலை ஸ்ரீமுருகன் பாடசாலை குடிநீரில் நஞ்சுகலந்த கொடிய செயலுக்கு பொறுப்பானவர்களை தவிர்த்து இன்னொருவர் மீது பழிசுமத்தும் பின்னணி என்ன என்று கேள்வி எழுப்பி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் ஊடகங்களுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்,

இச்சம்பவம் குறித்து ஏற்கனவே இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில், அப்பாடசாலையில் கல்விபயிலும் ஓர் மாணவியின் தந்தையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் எனது தம்பி என்றும், அதை எமது கட்சியோடு சம்பந்தப்படுத்தியும் ஆதாரமற்ற ஓர் செய்தியை இணையத்தளங்கள் ஊடாகவும் பரப்பும் செயலானது பெரும் அதிர்ச்சியையும் சந்தேகங்களையும் மயிலங்காட்டு மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை தீர்வுக்காகவும், அபிவிருத்திக்காகவும், வறியமக்களின் சமூக பொருளாதார மீட்சிக்காகவும் அர்ப்பணிப்போடு உழைக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினர் என்ற வகையிலும் இவ்விடயம் குறித்து பதில் கூற விரும்புகிறேன்.

எனக்கு ஓர் தம்பி மயிலங்காட்டிலோ அன்றி வேறெங்குமோ இல்லை என்பது நான் என்றுமே ஒட்டி உறவாடிக்கொண்டிருக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

# நட்புறவுக் கிராமம் இருபாலையில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இருபாலை கிழக்கு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் நட்புறவு கிராமத்தைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

நூலகம் மற்றும் சிறுவர் பூங்கா வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள குறித்த கிராமத்திற்கு அவற்றிற்கான உபகரணங்கள் சிறுவர் மகளிர் விவகார அமைச்சர் ரோசி சேனநாயக்காவால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் மகளிர் விவகார அமைச்சர் ரோசி சேனநாயக்க, இலங்கை சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், பிரதேச செயலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் காயம்

(மாங்குளம்)

மாங்குளம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாங்குளம், ஐயன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது சந்தேகத்திற்கு இடமான இளைஞன் ஒருவனை சோதனையிட்டபோது அவரது பையில் கஞ்சா இருந்துள்ளது.

இதனையடுத்து அந்த இளைஞனை கைதுசெய்ய முற்பட்டபோது அவர் தப்பிச் செல்ல முயன்றுள்ளார். இதன்போது பொலிஸார் சுட்டதில் அவர் காலில காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் இரவு 11.00 மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் புத்தூர், ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி தர்சுதன் (வயது - 26) என்பவரே காயமடைந்தார்.

# இரகசிய முகாம்கள் இல்லை

## மீண்டும் சொல்கிறார் ரணில்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் எப்பகுதியிலும் இரகசிய முகாம்கள் எதுவும் இல்லை. அவ்வாறு இருப்பதாக நான் அறியவில்லை. இது தொடர்பாக நாம் தொடர்ந்தும் கலந்துரையாட வேண்டும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் நேற்று தெரிவித்திருக்கின்றார்.

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயமாகவுள்ள பொதுமக்களின் காணிகளை இராணுவம் பொருளாதார ரீதியில் பயன்படுத்தி வருவதாகக் கூறப்படுவது தொடர்பில் நேரில் சென்று ஆராய்வார் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர், யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பி

19 ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சி வலயத்தில் 8 பாடசாலைகள் மூடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 08 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 112 பாடசாலைகளைக் கொண்ட இக்கல்வி வலயத்தில் தற்போது 104 பாடசாலைகளே இயங்குகின்றன.

பூநகரியின் அத்தாய் முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம், பல்லவராயன்கட்டு இந்து ஆரம்ப வித்தியாலயம், பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயம், செட்டியகுறிச்சி அ.த.க. பாடசாலை, தம்பிராய் அ.த.க. பாடசாலை, கௌதாரிமுனை அ.த.க. பாடசாலை என்பவற்றுடன் கிளிநொச்சி கரைச்சிக் கோட்டத்தின் சிங்கள மகா வித்தியாலயம், குஞ்சுக்குளம் பாடசாலை என்பன மூடப்பட்டுள்ளன.

போர் காலத்திலும் மற்றும் கிராமங்களில் குறைவடைந்தமை பாடசாலைகள் இருந்த சூழல் உவரடைந்தமை எனப்பல்வேறு காரணங்களினால் தற்போது இந்த எட்டுப்பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

(160)

# கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா, சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப் பட்டக்கற்கைநெறி, அபிவிருத்தி மற்றும் பொதுக் கொள்கையில் முதுமாணி ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை 10.04.2015 வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல்கல் கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் மற்றும் ஆதி பராசக்தி அறிவியல் கல்லூரி. 4 ஆம் வட்டாரம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# வீட்டுத்திட்டம் வழங்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா எல்லப்பர் மருதங்குளம், ஆனந்தபுரம் கிராம மக்கள் தங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லையென குற்றம் சாட்டியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து அகதிமுகாம்களிலும், இந்தியவிற்கும் இடம் பெயர்ந்து சென்ற மக்கள் அதன் பின் வவுனியாவில் பல கிராமங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டார்கள்.

அவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களில் வவுனியா எல்லப்பர் மருதங்குளம், ஆனந்தபுரம் கிராமத்தில் 44 குடும்பங்களை சேர்ந்த மக்களும் உள் அடங்குகின்றனர். இக்கிராம மக்கள் 1996 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மண் குடிசைகளிலும் தகரக் கொட்டில்களிலும் வாழ்க்கை நடத்தும் இம்மக்கள் கூடுதலாக கூலித்தொழில் செய்பவர்களாகவே காணப்படுகிறார்கள். அத்துடன் மழைகாலங்களில் ஒவ்வொரு வருடமும் தாங்கள் இடம் பெயர்ந்து செல்வதாக தெரிவிக்கும் இக்கிராம மக்கள் தாங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் முற்றாக பாதிக்கப்படும் வீடுகளுக்கு பணம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கும் மக்கள் நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கப்படுமிடத்து மழை காலங்களின் இடம் பெயர்விலிருந்து விடுதலை கிடைக்கும் எனக் குறிப்பிட்டனர்.

மக்கள் வீட்டுத்திட்டம் கோரி போராட்டங்களை நடத்திய போதும் அதிகாரிகள் மேலிடத்திற்கு அறிவிக்கிறோம்,தெரிவிக்கிறோம் போன்ற வாக்குறுதிகளை வழங்கி தட்டி கழிப்பதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.


(70)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | MY STYLE |
| Am 09.55 | காலைச்செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T .COM |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்

## ஸ்கந்தபுரம் மக்கள் வேண்டுகோள்



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துமாறு ஸ்கந்தபுரம் கிராமமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அக்கராயன்குளத்திலிருந்து இடதுகரை வாய்க்கால் வழியாக பாய்ந்துசெல்லும் குளத்தின் நீரினை ஸ்கந்தபுரம் கிராமத்திற்கு ஏற்றுநீர்ப்பாசனம் மூலம் வழங்கப்பட்டுவந்தது. 1990 உடன இவ் ஏற்றுநீர்ப்பாசனம் செயலற்றுப்போனது.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் குறித்த நீர்ப்பாசன புனரமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ள போதிலும் நீர்விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலைமை காணப்படுகின்றது. இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் கருத்துத் தெரிவிக்கையில் ஸ்கந்தபுரம் ஏற்றுநீர்ப்பாசனத்தினை மீண்டும் செயற்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதாகவும், கடந்த இரு ஆண்டுகளாக வறட்சி காரணமாக அக்கராயன்குளத்தில் நீர்த்தட்டுப்பாடு நிலவியமை காரணமாக மேற்படி நீர்ப்பாசனத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியவில்லையெனவும், தற்போது குளத்தில் போதிய நீர் உள்ளமையினால் இவ் நீர்ப்பாசனத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(160)

# முதியோர் சம்மேளனம் முல்லையில் அங்குரார்ப்பணம்

முல்லைத்தீவு மாவட்ட முதியோர் சம்மேளனம் மிக அண்மையில் மாவட்ட செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைவராக நடராசா சண்முகரத்தினம் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக பேதுருப்பிள்ளை அமிர்தநாதனும், பொருளாளராக செல்லையா வீரையாவும், உப தலைவராக சின்னையா கதிரவேலுவும், உப செயலாளராக அழகிரி பண்டாரம் முருகேசுவும், தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 5 பேரைக கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி ந. தசரதன், சிரேஷ்ட சமூக சேவைகள் அதிகாரி க.குணசிங்கம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி கு.குணசீலன், துணுக்காய் பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி தி.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(90)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு பொற்பதி அறிவாலயத்தில் சரஸ்வதி முன்பள்ளியின் 30 ஆவது கால்கோள் விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# கரவெட்டி பிரதேச செயலகத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம்பெற்றது. பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் என்போர் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலகம் முழுவதும், 750 வீதியின் முன்பக்கம் என்பவற்றில் இச்சிரமதானப் பணி இடம்பெற்றது.

(18)

# கல்வியை சிறப்பாக கற்பதன் மூலம் நற்பிரஜையாக சமூகத்தில் வாழமுடியும்

## ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வி கற்கும் போது தான் சமூகத்தில் சிறந்த சிற்பிகளாக உருவாக முடியும் இதனால் கல்வியினை கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும். பிள்ளைகளது ஒழுக்கம் கல்வி நடவடிக்கைகளில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என வலிகாமம் வ[illegible]த்தின் ஓய்வு நிலைக்கல்விப்பணிப்பாளர் திருமதி ரெஜீனா இருதயநாதன் தெரிவித்த[illegible].

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தரம் 6 மாணவர்களிற்கான கால்.கோள் விழா கல்லூரியின் முதல்வர் எஸ்.சிவநேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

வகுப்பு நிலைகளினை அவதானிப்பதன் மூலமும் ஓய்வு நிலையில் எவ்வாறு செயற்படுகின்றனர் என்பதினை பொறுத்தும் மாணவர்களின் ஒழுக்கங்களினை கண்டு கொள்ள முடியும்.

மாணவர்களாகிய உங்களை வெறும் படிப்பிற்காக மட்டும் சமூகம் நோக்கவில்லை நீங்கள் சமூகத்திற்கான வகையில் நல்ல பிரசைகளாக உருவாக வேண்டும் நீங்கள் பெரியவர்களின் மீது அன்பு செலுத்த வேண்டும். கடவுளை வணங்க வேண்டும் கடவுளோடு வாழ்க்கையினை தொடங்கியவர்கள் எவ்விடயத்திலும் தோற்பதில்லை நீங்கள் மிகச்சிறந்த இறைபக்தியுள்ளவர்களாக உருவாக வேண்டும்.

இளைஞர் சமுதாயம் முட்டி மோதி உடைந்து விடுமோ என்ற அச்ச உணர்வு எம்மிடையே காணப்படுகின்றது.

பெற்றோர்கள் பிள்ளைகளினை வளர்க்கும் விடயத்தில் கூடிய கருசனை காட்ட வேண்டும். உங்களை உங்களது பெற்றோர்கள் வளர்பதில் காட்டிய அக்கறையினை விட நீங்கள் சிறப்பான அக்கறை காட்ட வேண்டும் இதுவே இன்றைய சமூகத்தின் மிக முக்கியமான தேவையாக உள்ளது.

மாணவர்கள் போட்டி போட்டுக்கொண்டு கல்வியினை கற்கவேண்டும். பரீட்சையில் பெறுபேறுகள் வீழ்ச்சியடையுமாயின் பெற்றோர்களதும் மாணவர்களது கைகளிலும் தான் தங்கியுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளையின் முகாமையாளர் பி.பாலகுமார் கலந்து கொண்டார். (63)

# இது சஹாரா பாலைவனம் அல்ல



(யாழ்ப்பாணம்)

யாழ்.இராச வீதியிலுள்ள தோட்டக் காணிகளில் கொழுத்தும் வெய்யிலின் மத்தியிலும் தோட்ட வேலைகளில் அதிகளவான பெண்களே வேலை செய்கின்றனர்.

தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு நாளொன்றுக்கு 500 ரூபாய் தொடக்கம் 750 ரூபாய் வரையில் கூலியாக கொடுக்கப்படுகின்றது. இந்தப் பெண்கள் தமது குடும்ப பொருளாதாரத்துக்காக இந்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# குழப்பத்தில் முடிந்தது பழைய மாணவர் சங்கத் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது ஜனநாயக முறைப்படி நிர்வாக தெரிவு இடம்பெறவில்லை எனக் கூறிய பெருமளவு பழைய மாணவர்களால் அமைதியின்மை ஏற்பட்டது.

கடந்த 8ஆம் திகதி பழைய மாணவர் சங்க கூட்டம் கூடிய போது 35 வரையான மாணவர்கள் சமூகமளித்திருந்தமையினால் கோரமின்மை காரணமாக இடைக்கால நிர்வாகத் தெரிவு இடம்பெற்றதாகவும், அதனைத் தொடர்ந்து 22 ஆம் திகதி புதிய நிர்வாக தெரிவு இடம் பெற்றுள்ளது. இந்த நிர்வாக தெரிவில் அரசியல் தலையீடு காணப்பட்டதாகவும், பெருமளவான பழைய மாணவர்கள் எதிர்பார்த்த செயலாளரை நியமிப்பதற்கு அதிபர் அனுமதி வழங்கவில்லை எனவும் ஜனநாயக முறைப்படி ஒரு பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்படும் போது யாரை இறுதியாக தெரிவு செய்வது என்பது தொடர்பில் வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும் என்றும் ஆனால் அதிபர் அதற்கு வாய்ப்பளிக்கவில்லை எனவும் ஒரு தொகுதி பழைய மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பழைய மாணவர்கள் சங்கத்தின் செயலாளர் நியமிக்கப்படுகின்றமை தொடர்பாக இரு தரப்பினரிடையே பாரிய போட்டி காணப்பட்டது. இந்நிலையில் கிளிநொச்சி த.தே.கூட்டமைப்பின் பா.உறுப்பினர் சிறிதரனின் பிரத்தியேக செயலாளரும், தமிழரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளை உப தலைவருமான பொன்காந்தன் செயலாளராக தெரிவு செய்யப்பட்டமையை அடுத்து, மற்றொரு தரப்பு தனியார் கல்வி நிலையம் நடாத்தும் ஒருவரை செயலாளராக நியமித்தது.


இந்த நிலையில் ஜனநாயக முறைப்படி வாக்கெடுப்பின் பிரகாரம் செயலாளரை முடிவு செய்ய வேண்டிய நிலையில் அதிபர் தான் விரும்பிய ஒருரை செயலாளர் என அறிவித்து நிர்வாகத் தெரிவை முடித்து விட்டதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த நிர்வாகத்தில் தெரிவு செய்யப்பட்ட உப செயலாளர் உள்ளிட்ட பலர் தமக்கு குறித்த பதவி வகிப்பதில் விருப்பமின்மையை வெளியிட்ட போதிலும், அங்கு தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கின்றனர். எனவே தற்போது தெரிவு செய்யப்பட்ட நிர்வாகமானது, அரசியல் தலையீடு காணப்படுவதாகவும், பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அது பாதிப்பினை ஏற்படுத்தும் எனவும், பெருமளவான பழைய மாணவர்களின் விருப்பத்திற்கு அமைய குறித்த நிர்வாகம் தெரிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.


எனவே தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகத்தினை கலைத்து, அரசியல் தலையீடு அற்ற புதிய நிர்வாகம் ஒன்றினை தெரிவு செய்வதற்கு பாடசாலை சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கும் அவர்கள் வலய கல்வி அலுவலகத்தின் மேற்பார்வையில் நியாயமான புதிய நிர்வாகத் தெரிவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தில் உப செயலாளர் உள்ளிட்ட சில உறுப்பினர்களும் தங்களின் பதவிகளை இராஜினாமா செய்யதுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக அதிருப்தியான பெருமளவு பழைய மாணவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சர், மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பாடசாலை அதிபரிடம் வினாவியபோது, தான் இது தொடர்பில் கருத்துக் கூற விரும்பவில்லை என தெரிவித்தார். (29)




## வடக்கின் கல்வி அமைச்சர் படும்பாடு - சோதனைமேல் சோதனை போதுமடா சாமி



அண்மையில் அதிபர்களுக்கான பதவி உயர்வுகள் கிடைத்திருக்கின்றன அல்லவா. அதிபர் தரம் ஒன்று கிடைத்தவர்கள் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் பொருத்தமான பாடசாலைகளுக்காகக் காத்திருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கான பாடசாலைகளை எப்படி வழங்குவது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு.

பதவி உயர்வைப் பெற்ற அதிபர்களில் பலர் 1 சீசி பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை 1 ஏபி பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்யக் கூடிய திராணி வடக்கு மாகாணசபைக்கு இல்லை என்று பதவி உயர்வு பெற்ற அதிபர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனாலும் இந்த விடயத்தில் தமது உரிமைகளையும் நியாயத்தையும் விட்டுக் கொடுக்கப்போவதில்லை என்று அவர்கள் மேலும் சொல்கிறார்கள்.

ஏற்கனவே தகுதி இருந்தவர்களுக்குப் பதிலாக தகுதி குறைந்தவர்களை அரசியல் செல்வாக்கின் அடிப்படையிலும் தனிப்பட்ட விருப்புகளின் அடிப்படையிலும் வலயக்கல்விப் புணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருப் பதைப் போலத் தம்மை ஓரம்கட்டினால் அதற்கு எதிராகத் தாம் போராடுவோம் என்றும் இந்த அதிபர்கள் எச்சரிக்கிறார்கள்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர்தான் வன்னி மாவட்டங்களிலிருந்து இடமாற்றம் கோரும் ஆசிரியர்கள் கல்வி அமைச்சரைச் சுற்றிவளைத்துத் தடுத்து வைத்திருந்தனர். அந்தச் சோதனை போதாதென்று இப்பொழுது இந்த அதிபர் பதவி உயர்வினால் அடுத்த சோதனை வந்திருக்கிறது கல்வி அமைச்சருக்கு.

அரசியல் என்றால் இனிப்பாகத்தானிருக்கும். அதிலும் அமைச்சுப் பதவியும் அதில் கிடைக்கும் அதிகாரம் என்பதும் வெல்லக்கட்டியாக இருக்கும் என்று எண்ணியவர்களுக்கு அது பாவற்காயாகக் கசக்கும் ஒரு சங்கதி என்பது இப்பொழுதான் விளங்கியிருக்கு.

இதற்குக் காரணம், அரசியல் அதிகாரத்தைத் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்காகப் பயன்படுத்தியதால் வந்த வினையே. நியாயமாக - பக்கம் சாராமல் நடந்திருந்தால், இனிப்பு ஒரு போதும் கசப்பாக மாறாது.

## தேசியத் தலைவர் என்றால் என்ன சும்மாவா?



வடக்கு மாகாண விவசாய அமைச்சருக்கு உள்ள தீராத பெரிய ஆசை என்னவென்று தெரியுமா?

தேசியத்தலைவராக தானே வரவேணும் என்பதுதான்.

இப்பவே அவர் தேசியத்தலைவர் தான் தான் என்ற நினைப்பில் பல எடுப்புகளையும் எடுத்து வருகிறார்.

இதற்கு நல்லதொரு உதாரணம், ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு, முல்லைத்தீவுக் காட்டில் தடிவெட்டப் போனவர்கள், அங்கே ஒரு புலிக்குட்டியைக் கண்டு எடுத்திருந்தார்கள். இதை எப்பிடியோ அறிந்த விவசாய அமைச்சர், அங்கே பறந்தோடிப்போய், அந்தப் புலிக்குட்டியைத் தூக்கி வைச்சுக்கொண்டு ஒரு போஸ் குடுத்தார் - அச்சு அசல் பிரபாகரன் ஸ்ரைல்தான்.

இப்படி ஆளுக்கு தானும் ஒரு பிரபாகரன் என்ற எண்ணம்.

இதை அறிந்தவர்களும் அவதானிப்பவர்களும் 'எடுப்புத் தான் பிழைப்பைக் கெடுக்கும்' என்று சொல்லிவருகிறார்கள்.

ஆனால், ஆசை பெருத்து விட்டால் அது ஆளை ஆட்டிப்படைக்காமல் விடாதல்லவா.

பசுமைப்புரட்சி என்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்றும் கூட்டுறவே நாட்டுயர்வு என்றும் பால் உற்பத்தியால் வீடுகளை பாற்காடுகளாக்குவோம் என்றும் முழங்கிக் கொண்டிருக்கும் விவசாய அமைச்சரின் நடவடிக்கைகளால் எந்த ஒரு முன்னேற்றத்தையும் நாங்கள் காணேல்லை என்கிறார்கள் விவசாயிகள்.

இதுக்கு அவரில் ஒரு பழியும் சொல்ல முடியாது, ஏனென்றால், அவர் ஒரு தேசியத்தலைவர் ரேஞ்ச்சில இருக்கிற ஆளைப்போய், விவசாயம், வேளாண்மை, கால்நடை என்றெல்லாம் கரைச்சல் குடுக்கப்பிடாது.

இதற்குள் ஒரு செய்தி - 'அமைச்சரின் விசுவாசிகளாக இருக்கிற நாலைஞ்சு பேர் 'அமைச்சருக்கு அது பிடிக்கும். இது பிடிக்காது. அவருக்காக அப்படிச் செய்ய வேணும். இப்படிச் செய்யக் கூடாது என்று வாற போற ஆட்களிட்டையெல்லாம் கண்டிஷன் போட்டுக்கொண்டிருக்கினம்.

தேசியத் தலைவர் என்றால் என்ன சும்மாவா?

உழைப்பவனின் காலம் பொன் ஆகுகிறது. உழைக்காதவனின் பொன் காலமாகுகிறது. - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வெழக்குமா வெழக்காதா?

"நாட்டின் எந்தவொரு இடத்திலும் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க தற்போதுள்ள அரசாங்கம், ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அவசரகாலச் சட்டத்தை மீண்டும் பலப்படுத்தி நபர்களைக் கைது செய்வதற்கோ அல்லது தடுத்து வைப்பதற்கோ இந்த அரசாங்கத்துக்கு எந்தவொரு தேவையும் இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்".

நேற்றைய பத்திரிகைச் செய்திகளில் மேலுள்ள செய்தியும் ஒன்று. அவசரகாலச் சட்டத்தைப் பலப்படுத்தி யாரையும் கைது செய்வதற்கோ தடுத்து வைப்பதற்கோ இப்போது எந்தத் தேவையுமில்லை என்று அலங்காரமாகக் கூறியிருக்கும் பிரதமர், அவசர காலச் சட்டத்தை நீக்குவதாக ஏன் கூறவில்லை?

நடைபெறுவது நல்லாட்சி என்றால், "மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை" என்ற வீர வசனமும் இப்போது எதற்காக?

பிரதமர் ரணிலின் மேற்கண்ட வீரவசனங்களுக்கு பிரதிபலிப்புக் காட்டாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களிடம் வந்து நின்று, "வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை முற்றாகத் திரும்ப அழைக்க வேண்டும்" என்று மக்களை உணர்ச்சிவசப்படுத்த சும்மா முழங்குவது ஏன்?

நீங்கள் கொண்டுவந்த அரசாங்கத்தினது பாராளுமன்றத்தையும் அதற்கும் மேலுள்ள – நீங்களும் அங்கம் வகிக்கும் – தேசிய நிறைவேற்றுச் சபையையும் பயன்படுத்தி, அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு முயற்சிப்பதை விட்டுவிட்டு, மக்களிடம் வந்து கூக்குரலிட்டால் இராணுவத்தை அகற்றிவிடலாம் என்று யாரை நம்பச்சொல்கிறீர்கள்?

பயங்கரவாதம் தலைதூக்கும் ஆபத்து இருக்கிறது என்றும், அவசரகாலச் சட்டத்தை நீக்க முடியாது என்றும் சொல்லிக்கொண்டிருக்கும்.... நீங்கள் கொண்டுவந்த அரசுத் தலைவரிடம் விளக்கம் கேட்பதை விட்டுவிட்டு, இராணுவத்தை அகற்றப் போராட்டம் நடத்தப்போவதாகச் சொல்லி யாரை ஏமாற்றுகிறீர்கள்?

பாராளுமன்றத்திலோ தேசிய நிறைவேற்றுச் சபையிலோ பேசிச் செய்யக்கூடிய அலுவல்களைச் செய்வதை விட்டுவிட்டு, உங்களது ராஜதந்திர அணுகுமுறைகளால் சாதிக்க முடிந்த ஏதொரு விஷயத்தைத்தன்னும் காட்டி மக்களை ஆறுதலடைய வைக்காமல், உங்களால் ஆற்றவே மாட்டாத விஷயங்களுக்கு வெறுமனே முழங்கிக் கொண்டிருப்பது ஏன்?

முகாம்களை மூடிவிட்டு இராணுவம் திரும்பிச் செல்லாவிட்டால் போராட்டம் வெடிக்கும் என்று கடந்த ஐந்து வருடங்களாக அறைகூவி வந்திருக்கிறீர்கள். 2015-ல் தீர்வே வந்துவிடும் நல்லாட்சியைக் கொண்டுவருகிறோம் என்று நம்பிக்கையுடன் தமிழ் மக்களை வாக்களிக்கச் சொல்லி, நீங்கள் விரும்பிய ஆட்சியையும் கொண்டுவந்திருக்கிறீர்கள்.

நாட்டில் மாற்றம் வந்தபிறகும், உங்களால் மக்களுக்கு வாக்களித்தபடி எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியவில்லை என்றால், வாய் ஓயாமல் முழங்கிக் கொண்டிருப்பதை விட்டு விட்டு, இத்துறைக்கு அந்த அகிம்மைப் போராட்டத்தையாவது வெடிக்க வைத்திருக்க வேண்டுமல்லவா?

தெற்கில் உள்ளோரிடம் பயங்கரவாத அச்சம் நீங்காமல், அவசரகாலச் சட்டம் நீக்கப்படாமல், இராணுவப் பிரசன்னமும் முற்றாக நீக்கப்படாது என்பதைத் தெரிந்துவைத்திருக்கும் நீங்கள் ஒன்றில் உங்கள் அரச சபைகளில் பேசவேண்டும்.

இல்லை, நீங்கள் கொண்டுவந்த அரசிடமும் பேசி உங்களால் எந்தக் காரியத்தையும் ஆற்றமுடியவில்லை என்றால், ஐந்து வருடங்களாகச் சொல்லிவரும், அந்தத் தீர்வு காணும்வரையான அகிம்சைப் போராட்டத்தையாவது முன்னெடுத்திருக்க வேண்டும்....

அதுவுமில்லை, தொடர் உண்ணாவிரதங்களை நடத்த வேண்டிய அளவுக்கு அப்படியொன்றும் உடனே தீர்வு எடுக்கவேண்டிய அவசரத்தேவை இப்ப இல்லையென்றால், "போராட்டம் வெடிக்கும்" என்ற முழக்கங்களை ஏன் விடாமல் தொடர்கிறீர்கள்?

- ஆசிரியர்

# ஒயில் கலந்த குடிநீர்ப் பாவனை; நீண்டகாலப்பாதிப்பை ஏற்படுத்தும்

## மருத்துவநிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் கழிவு எண்ணெய் உள்ளிட்ட பாரிய உலோகஙகள் காணப்படுவதனால் அந்த நீரை அருந்த மக்கள் அச்சம் தெரிவித்து வருவதுடன் அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போராட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந் நிலையில் அண்மையில் வடக்கு மாகாண சபையால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு அந்த நீரில் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் நஞ்சு மாசுக்கள் எதுவும் இல்லை என்று அறிவித்திருந்தது.

இந் நிலையில் நீர் வடிகாலமைப்பு சபையின் அறிக்கையில் அந்த நீரில் மனித உயிருக்கு கேடுவிளைவிக்கும் எண்ணெய் மற்றும் உலோகப் பொருட்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது ஒன்றுக்கு ஒன்று முரணான தகவல்கள் தொடர்பில் மீண்டும் போராட்டங்கள் வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பில் முரண்பட்ட அறிக்கைகளும் முரண்பட்ட முடிவுகளும் வெளியிடப்பட்டுள்ளதால் அந்த நீரை மூன்றாம் தரப்பு ஒன்று ஆய்வு செய்யும்வரை அருந்த வேண்டாம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குறிப்பிடுகிறது.

இதேவேளை கிணற்றடி நீரில் கண்ணுக்குத் தெரியக் கூடியதாகவும் உணரக்கூடியதாகவும் எண்ணெய் உள்ளிட்ட மாசுக்கள் காணப்படுவதாக யாழ் மருத்துவ சங்கத் தலைவரும் சமுதாய வைத்திய நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

அதனால் குறித்த நீரை அருந்துவது ஆரோக்கியமற்றது என்றும் நீண்ட கால ரீதியில் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தமது பகுதியில் உள்ள கிணறுகளில் எண்ணெய்ப் படலங்கள் தென்படுவதாகவும் நீரில் எண்ணெய் மணம் வீசுவதாகவும் தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் அந்த நீரை எவ்வாறு அருந்துவது என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# எதிர்க்கட்சித்தலைவரை தேர்ந்தெடுப்பது சபாநாயகரைப் பொறுத்த விடயம்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் எந்தவொரு இடத்திலும் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க தற்போதுள்ள அரசாங்கம், ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. அவசரகாலச் சட்டத்தை மீண்டும் பலப்படுத்தி நபர்களைக் கைது செய்வதற்கோ அல்லது தடுத்து வைப்பதற்கோ இந்த அரசாங்கத்துக்கு எந்தவொரு தேவையும் இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார். தேசிய ஊடகங்களின் பிரதானிகள் மற்றும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களை அலரி மாளிகையில் நேற்று சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான "தேசிய ஒற்றுமைக்கான செயலகம்" ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களை உடனடியாகக் கைது செய்யக்கூடிய அதிகாரம் அரசாங்கத்துக்கு இல்லை என்று இதன்போது தெரிவித்த பிரதமர், தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவே அரசாங்கத்தால் முடியும் என்றும் கூறினார். இந்நிலையில், அவர்கள் குற்றவாளிகளா என்று விசாரித்தறிந்து அவர்களுக்குரிய தண்டனையை வழங்கும் பொறுப்பு நீதிமன்றத்திடமே உள்ளது.

அவசரகாலச் சட்டத்தை மீண்டும் பலப்படுத்தி நபர்களைக் கைது செய்வதற்கோ அல்லது தடுத்து வைப்பதற்கோ தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எந்தவொரு தேவையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சினை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை சபாநாயகருக்கும் நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகளுக்குமே உள்ளது.

இவ்விடயத்தில் நான் இந்த நாட்டின் பிரதமர் என்ற வகையிலேயே தொழிற்படுவேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறினார். இந்த நாட்டின் எந்தவொரு பகுதியிலும் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இந்த அரசாங்கம் ஒருபோதும் இடமளியாது. ஜாதி, மத பேதமின்றி அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய நாடொன்றை உருவாக்குவதே இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும். அதற்காக அனைத்து தரப்பினரும் தங்களது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். இனங்களுக்கு இடையில் ஒற்றுமை பலப்படும் வகையில் ஊடகங்களும் செயலாற்ற வேண்டும் என்றும் பிரதமர் இதன்போது கோரினார்.

நாட்டுக்குள் நிதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதே இந்த அரசாங்கத்தின் அடுத்த நோக்கமாகும். அதற்கான புதிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அளித்த வாக்குறுதிக்கிணங்க, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தச் சட்டத்துக்கு எதிராக பல தரப்பினர், நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இவ்விடயத்தில் உயர்நீதிமன்றம் வழங்கும் தீர்மானத்தை அடுத்து இப்பிரச்சினைக்கான தீர்வு பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தேர்தல் முறையை மாற்றியமைப்பது குறித்து அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் அது தொடர்பான இறுதித் தீர்மானம் எட்டப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங் மேலும் கூறினார்.

# இலங்கைப்பணிப் பெண்கள் இருவர் சவுதியில் திடீர் மரணம்

சவுதி அரேபியாவின்அஸீர் பிரதேசத்தில் பணிப்பெண்களாக சேவையாற்றுவதற்கு சென்றிருந்த இலங்கை பணிப்பெண்கள் இருவர் மரணமடைந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்விருவரில் ஒருவர் விபத்திலும் மற்றவர் எரியூட்டப்பட்ட நிலையிலும் மரணமடைந்துள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் திருகோணமலை உப்புவேலியை வசிப்பிடமாகக் கொண்ட நகரா என்றும் அவர் ஐந்து பிள்ளைகளின் தாயாவார். 6 மாதங்களுக்கு முன்னரே பணிப்பெண்ணாக அவர் சவுதிக்கு சென்றுள்ளார்.

தான் பணிப்பெண்ணாக இருந்த எஜமானின் வீட்டு எஜமானி தன்னை தாக்கியதுடன் பல்வேறான துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தினார். அத்துடன் சில நாட்களுக்கு முன்னர் பெற்றோல் அல்லது வேறு ஏதாவது எரிபொருட்களை ஊற்றி, அறைக்குள் போட்டு பூட்டி எரியூட்டியதாகவும் என்று அஸர் வைத்தியசாலையின் ஊழியரிடம் அந்த பணிப்பெண் தெரிவித்துள்ளார்.

அஸர் வைத்தியசாலைக்கு வெளியே உயிருக்காக துடித்து கொண்டிருந்த அப்பெண்ணை, வைத்தியசாலை ஊழியர்கள் வைத்தியசாலையில் அனுமதித்ததாக அந்நாட்டில் இருக்கின்ற இலங்கை சமூக சேவையாளரான நிமல் எடேரமுல்ல தெரிவித்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண்களை பார்வையிடுவதற்காக சென்றிருந்த போதே வைத்தியசாலை ஊழியர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அந்தப் பெண், 25 ஆம் திகதி புதன் கிழமை மரணமடைந்துள்ளார். அவருடைய சடலம் அஸர் வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

**முள்ளிவாய்க்கால் அவலத்தையும் வெள்ளைக்கொடி விவகாரத்தையும் இறுதிப்போரையும் சரணடைந்த போராளிகளின் தகவலற்ற நிலையையும் அப்பட்டமான மனித உரிமை மீறல் என்று தமிழ்த் தேசியவாதிகள் சொல்லி வரும் நிலையில், அந்த மனித உரிமை மீறல்களைச் செய்தவருக்கு, அவை நிகழ்வதற்கான காரணகர்த்தருக்கு பீல்ட் மார்ஷல் பதவி உயர்வு வழங்கப்பட்டமையை ஏன் தமிழ்த் தரப்பில் யாரும் கேள்வி கேட்கவில்லை?**



■ வீ. சுந்தரராஜன்

# ஃபீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா! + மானத் தமிழர்கள்?

இராணுவ அதிகாரியொருவருக்கு உலகத்தரத்தில் வழங்கப்படும் அதியுயர் பதவியான ஃபீல்ட் மார்ஷல் பதவி, இலங்கையில் முதன் முறையாக ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கான இந்தப் பதவி உயர்வை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன வழங்கியிருக்கிறார். ரணில் தலைமையிலான புதிய அரசாங்கத்தில் இது நடந்திருக்கிறது.

இது படைத்துறையில் அளிக்கப் பட்ட மிக உயர்வான மரியாதை. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் பெரும் சாதனை புரிந்தால் மட்டுமே இந்த மாதிரியான பதவியை படைத்தளபதிகளுக்கு வழங்கும் நடைமுறை உள்ளது என்று வேறு சொல்லப்படுகிறது. தென்னாசியாவில் இந்த மதிப்புயர்ந்த பதவியை இதுவரையில் மூன்று பேர் மட்டுமே பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது பெற்றிருப்பவர் சரத் பொன்சேகா.

ஆகவே மிகப் பெரியதொரு சாதனையை ஜெனரல் சரத் பொன்சேகா செய்திருந்ததற்காகவே இந்தப்பதவி உயர்வை அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

அப்படி என்ன பெரிய சாதனையைச் சரத் பொன்சேகா செய்தார்?

இலங்கை மீதான அந்நிய நாட்டுப் படையெடுப்புகள் எதனையும் போரிட்டு முறியடித்ததற்காகவா?... அப்படி எந்த நாட்டுடனான யுத்தத்தில் இலங்கையை வெற்றியடையச் செய்ததற்காக நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முனைந்து கொண்டுவந்திருக்கும் புதிய அரசாங்கம் பொன்சேகாவுக்கு ஃபீல்ட் மார்ஷல் பதக்கத்தை வழங்கியிருக்கிறது?

அப்படி அந்நிய நாட்டுப் படையெடுப்பு எதுவும்தான் இலங்கையில் நடக்கவில்லையே.... அப்படியாயின்,

ஒருவேளை, விடுதலைப் புலிகளை அழித்தது ஒருபெரும் சாதனை என்றா? அல்லது, முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தியதாகச் சொல்லப்படும் படுகொலைக்காகவா? அல்லது வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த புலிகளின் முக்கியஸ்தர்களைப் படுகொலை செய்ததாகக் கூறப்படும் நடவடிக்கையின் இராணுவத்தளபதி என்பதற்காகவா? அல்லது சரணடைந்த புலிகள் உறுப்பினர்களைப்பற்றிய தகவலே தெரியாமல் செய்துமுடித்தார் என்பதற்காகவா?

ஏனென்றால் ஃபீல்ட் மார்ஷல் என்ற இந்த உயர்ந்த பதவி, யுத்தத்தில் நிகழ்த்திய பெரும் சாதனைக்காகவே வழங்கப்படுவதாகும். இது எந்த நாட்டுடன் செய்த யுத்தத்துக்கு? சரத் பொன்சேகா எந்த யுத்தத்துக்குத்தலைமை தாங்கினார்? யாருடனான யுத்தத்தைத் தலைமை தாங்கினார்? எந்த சாதனைக்காக இந்தப் பதக்க அணிவிப்பு?....

இந்தக்கேள்விகளை புதிய அரசாங்கத்தின் தேசிய நிறைவேற்றுச் சபையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டிருக்க வேண்டுமல்லவா? தமிழர்களாவது, அவர்களை உணர்ச்சிகரமாக வழிநடத்தும் ஊடகங்களாவது கேட்டிருக்க வேண்டுமல்லவா? தமிழர்களும் வாக்களித்துக் கொண்டுவந்த அரசல்லவா இந்த யுத்த வெற்றிப்பதக்கத்தை அளித்திருக்கிறது?

ஆக, முள்ளிவாய்க்கால் வெற்றிக்கான வெகுமதி. சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட வேண்டும் என்பதுதானா தமிழர்கள் அவசரமாக எதிர்பார்த்த "மாற்றம்"? நூறு நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டியிருந்த இந்த மாற்றத்திற்காகவும்தானா தமிழர்கள் ஒத்தபடி திரண்டு வாக்களிக்கும்படி கோரப்பட்டார்கள்?

இதே சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்குவதற்காக 2010 இல் அதிகப்படியான தமிழர்கள் வாக்களித்தார்கள்.

ஆனால், அப்பொழுது சரத் பொன்சேகா வெற்றியடையவில்லை.

தமிழர்கள் விடவேயில்லை. ஐந்து ஆண்டுகள் காத்திருந்து, இப்பொழுது மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து, சரத் பொன்சேகாவை ஃபீல்ட் மார்ஷல் ஆக்கியிருக்கிறார்கள்.

அதாவது, தங்களைக் கொன்றமைக்காக - தங்களை சிறைகளில் அடைத்தமைக்காக, தங்களின் உறவினர்களைப் பற்றிய தகவல்களைத்தெரியாமலே வைத்திருந்தமைக்காக, தங்களுடைய அடிப்படை மனித உரிமைகளை மறுத்தமைக்காக அவர்களுமாய்ச் சேர்ந்து மிகப் பெரிய பரிசொன்றை அளித்திருக்கிறார்கள்.

என்னமாதிரியான மகத்தான் சாதனை இது!

இந்தச் சாதனையைத் தமிழ் மக்கள் செய்வதற்கு வழிகாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அதனுடைய தலைமைக்கும் தமிழ்மக்கள் தங்கள் வரலாறு முழுவதும் பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்க வேண்டும்.

உண்மையான அர்த்தத்தில் இந்தப் பதவி உயர்வையும் மாண்பையும் தமிழர்களே வழங்கியிருக்கிறார்கள். தமிழர்களின் ஆதரவின் மூலமாக அமைக்கப்பட்ட அரசினால்தான் இந்தப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழர்கள் எப்பொழுதும் இப்படித்தான் மற்றவர்களுக்குப் பரிசை அளித்து விட்டுத் தங்கள் மூக்கை உடைத்துக் கொள்கிறார்கள்.

இதற்கேற்ற மாதிரித்தான் தமிழ் அரசியல் தலைமைகளும் தமிழ்ப் புத்திஜீவிகளும் சிந்திக்கிறார்கள்; முடிவுகளை எடுக்கிறார்கள்.

இதற்கு என்ன காரணம் என்றால், இவர்கள் எப்பொழுதும் இனமானமாக எதையும் சிந்திப்பதுதான். இனமானம் அறிவை மறைத்து விடும். அறிவு மறைந்து போனால் நிதானம் இருக்காது. நிதானமில்லாதவர்கள், சரியாகச் சிந்திக்க முடியாது. அதனால்தான் உணர்ச்சி வசப்படுகிறார்கள். உணர்ச்சி வசப்பட்டுச் சிந்திக்கும்போது, அறிவை மறந்து சிந்திக்கும்போது தவறுகள் நிகழ்கின்றன.

> **முள்ளிவாய்க்கால் வெற்றிக்கான வெகுமதி சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட வேண்டும் என்பதுதானா தமிழர்கள் அவசரமாக எதிர்பார்த்த "மாற்றம்"? நூறு நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டியிருந்த இந்த மாற்றத்திற்காகவும்தானா தமிழர்கள் ஒத்தபடி திரண்டு வாக்களிக்கும்படி கோரப்பட்டார்கள்?**

இந்தக்குணம்தான் - இந்த இயல்புதான் தமிழ் மக்களின் பின்னடைவுக்குக் காரணமாகும்.

சரத் பொன்சேகாவுக்கு ஃபீல்ட் மார்ஷல் பதவி உயர்வும் மதிப்பளிப்பும் வழங்கப்பட்டமையானது தமிழ் அரசியல் முறைமைக்கு விழுந்துள்ள மிகப் பெரிய அடியும் மானக்கேடுமாகும்.

முள்ளிவாய்க்கால் அவலத்தையும் வெள்ளைக்கொடி விவகாரத்தையும் இறுதிப்போரையும் சரணடைந்த போராளிகளின் தகவலற்ற நிலையையும் அப்பட்டமான மனித உரிமை மீறல் என்று தமிழ்த் தேசியவாதிகள் சொல்லி வரும் நிலையில், அந்த மனித உரிமை மீறல்களைச் செய்தவருக்கு, அவை நிகழ்வதற்கான காரணகர்த்தருக்கு பீல்ட் மார்ஷல் பதவி உயர்வு வழங்கப்பட்டமையை ஏன் தமிழ்த்தரப்பில் யாரும் கேள்வி கேட்கவில்லை?

போர் என்பது கொலைகளுடன் சம்பந்தப்பட்டது. ஆகவே எத்தனை கொலைகள் நடந்தாலும் பரவாயில்லை. போரின் வெற்றிதான் முக்கியமானது. அந்த வெற்றிக்கே மதிப்பு. அந்த வெற்றியைப் பெற்றுக்கொடுத்தவருக்கே மதிப்பும் மதிப்பளிப்பும். அத்தகைய வெற்றியைப் பெற்றுக்கொடுத்தவர் சரத் பொன்சேகா.

ஆகவே, அவருக்கு இந்த மதிப்பளிப்புச் செய்யப்பட்டது சரியானது என்று எந்தத் தமிழ்த் தேசியத் தமிழராவது சொல்லத் தயாரா?

உண்மையில் சரத் பொன்சேகாவுக்கு இந்த உயர் பதவியை வழங்கியிருப்பதன் மூலமாக தமிழ் மக்களை அவமதித்திருக்கிறது அரசாங்கம்; துணைபோயிருக்கிறது த.தே.கூ.

ஆனால், இதைக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாய் திறக்கவில்லை. அவர்கள் கள்ள மௌனம் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் வாய் திறந்து, மனந்திறந்து ஒரு வார்த்தை பேச முடியாது.

காரணம், இது அவர்கள் செய்த முட்டாள்தனமாகும். ஆகவே இதை எதிர்ப்பது தமது தவறைத் தாமே அம்பலப்படுத்துவதாகும்.

அதாவது, முள்ளிவாய்க்கால் இரத்தம் காய முன், சரத் பொன்சேகாவுக்கு வாக்களியுங்கள் என்று கேட்டவர்கள், யுத்தக் குற்றத்துக்கான தண்டனை வழங்கப்பட முன்பு, அந்த யுத்தத்தில் பங்கெடுத்தவருக்காகப் பரிந்து பேசியவர்கள், எப்படி இந்தப் ஃபீல்ட் மார்ஷல் விடயத்தில் வாய்திறக்க முடியும்? என்று சொல்லிச் சிரிக்கிறார்கள் பலர்.

இது இன்றைய அவலம் மட்டுமல்ல. தொடர் அவலமாகும்.

எப்படியோ எந்த அரசு வந்தாலும் நிச்சயம் தமிழர்களை சங்கடத்தில் உட்படுத்தும் வேலைகளை செய்துவிடும் என்பதை மறுபடியும் நிரூபிக்கிறது இந்தப் பதவியுயர்வு. தமிழர்களின் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதியே இந்த பதவி உயர்வையும் மதிப்பளிப்பையும் வழங்கியிருக்கிறார்.

ஆனால், சரத்பொன்சேகாவுக்கு ஃபீல்ட் மார்ஷல் கிடைத்தது பற்றி தமிழர்களிடம் எதிர்ப்பையே காணவில்லை. ஆகவே இதை அவர்கள் இரகசியமாக ஆதரிக்கிறார்களா? ஏனென்றால் மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியல்லவா!

எது எப்படியோ இவர்களெல்லாம் ஈழச்செக்கில் உழலும் கனவுக் காளைகள்தான்.

## இந்திய கடற்படைக் கப்பல் திருமலை துறைமுகத்துக்கு


(கோப்புப்படம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கு விஜயம் செய்துள்ள நிலையில் இந்திய கடற்படைக்குச் சொந்தமான 4 கப்பல்கள் இன்று திருமலைக்கு வரவுள்ளன.

இதன்படி இந்திய கடற்படைக்குச் சொந்தமான டி.ஐ.ஆர், கேசாரி (TIR, KESARI) மற்றும் எல்லைப் பாதுகாப்பு படையின் வருன, சுதர்சனி (VARUNA, SUDARSHINI) ஆகிய கப்பல்களே இவ்வாறு திருகோணமலை திறைமுகத்தை வந்தடையவுள்ளன.

இந்தக் கப்பல்கள் நாளை வரை திருகோணமலையில் தரித்து நிற்கவுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

கலாசாரம், விளையாட்டு மற்றும் தொழில்சார், பயிற்சிகளுக்காக இந்திய கட்றபடை கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொகுதிவாரி தேர்தல் முறை எமது நாட்டுக்கு பொருந்தாது

## அரசை எச்சரிக்கிறார் விக்கிரமபாகு கருணாரட்ண

(கொழும்பு)

நாட்டின் அனைத்து இனத்தவர்களையும் திருப்திப்படுத்தும் வகையில் விகிதாசாரமும் தொகுதிவாரியும் உள்ளடங்கலான தேர்தல் முறைமையே அவசியமாகும்.

எனினும் இதற்கு மாறாக தொகுதிவாரி தேர்தல் முறைமை மாத்திரம் கொண்டு வந்தால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வோம் என நவ சம சமாஜக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பிலுள்ள நவ சம சமாஜக் கட்சியின் காரியாலத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனை தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தற்போது தேசிய அரசாங்கம் உருவாகியுள்ளன.இது நல்லதொரு தருணமாகும். இதனுடாக வளக்கமான எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும். எனினும் இந்த பயணத்தை திசைத்திருப்



பும் வகையில் இடதுசாரிகள் கட்சிகள் சில செயற்படுகின்றன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றிணைந்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த முனைகின்றனர். இதன்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் எல்லை மீறிய அதிகாரத்தை நீக்கும் வகையில 19 ஆவது திருத்த சட்டத்தைக் கொண்டு வந்துள்ளனர்.

எனவே இவ்வாறு நல்லாட்சி ஏற்பாடு களை முன்னெடுத்து வரும் நிலையில் குறித்த பயணத்தை இடை நிறுத்தும் வகையில் இடதுசாரிகள் கட்சிகள் செயற்பட்டு வருகின்றன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்தோடு தற்போது தேசிய நிறைவேற்று சபையினூடாக அனைத்து கட்சிகளுக்கும் தமது கருத்துக்களை வழங்க முடியும். அதேபோன்று தற்போது அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடுகளை விமர்சிக்கும் சுதந்திரமும் உள்ளது. எனினும் இடதுசாரிகள் கட்சிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினை அரசியலுக்கு கொண்டு வரும் முயற்சியில் களம் இறங்கியுள்ளனர். மேற்படி மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் களமிறங்கினால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியே இரண்டாக பிளவடையும்.

மேலும் தேர்தல் முறைமையை கொண்டு வருவதில் தற்போது குழப்பகரமான நிலைமை அரசாங்கத்திற்குள் தோன்றியுள்ளது. எவ்வாறாயினும் விகிதாசாரமும் தொகுதிவாரியும் உள்ளடங்கலான முறைமையை கொண்டு வர திட்டமிட்டுள்ளனர்.

எனினும் தற்போது முன்பு அமுலில் இருந்த தொகுதிவாரி முறைமை கொண்டு வரும் திட்டம் அரசிடம் இருப்பதாக தெரியவருகிறது. தொகுதிவாரி முறைமை சிறுபாண்மை உரிமை பறிக்கும் செயலாகும்.

எனவே சிறுபாண்மை பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டுமாயின் கலப்பு முறையிலான தேர்தல் முறைமை கொண்டு வரப்பட வேண்டும். இந்நிலையில் அரசினால் கலப்பு முறைமைக்கு மாறாக தொகுதிவாரி முறைமை கொண்டு வர முனைந்தால் நாம் நீதிமன்றத்தை நாடுவோம். அதற்கும் தீர்வு இல்லையேல் சர்வதேசத்திடம் குறித்த பிரச்சினையை கொண்டு செல்வோம் என்றார்.


## துறைமுக நகர உருவாக்கம் சீனாவுக்கு மைத்திரி பச்சைக்கொடி

(கொழும்பு)

சீனாவுக்கு உத்தியோகவபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்ச்சைக்குரிய போர்ட் சிற்றி திட்டத்தின் எதிர்காலம் குறித்து சீனாவிற்கு உறுதியளித்துள்ளார் என ரொய்ட்டர் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

சில பிரச்சினைகளுக்கு தீர்வை கண்ட பின்னர் குறிப்பிட்ட திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்குவோம் என இலங்கை ஜனாதிபதி சீன ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது தெரிவித்தார் என பிரதிவெளிவிவகார அமைச்சர் லியு சியான்சாவோ குறிப்பிட்டுள்ளார்.

போர்ட் சிட்டியை மையமாககொண்டு நடைபெற்றுள்ள விடயங்கள் தற்காலிகமானவை, பிரச்சினைகள் சீனாவின் தரப்பிலில்லை,சில விவகாரங்களுக்கு தீர்வை கண்ட பின்னர்



அந்த திட்டத்தை தொடரவுள்ளோம் என சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இரு ஜனாதிபதிகளும் கடன்களுக்கான வட்டிகள் குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது பற்றி ஆராயவில்லை என அவர் தெரிவித்துள்ளார். சீனா இரு நாடுகள் மத்தியிலும் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்த விரும்புகின்றது.

இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் பயிற்சி கள், ஆயுத தளபாடங்களை வழங்குவது குறித்து ஆராய்ந்தனர் என பிரதிவெளிவிவகார அமைச்சர் லியு சியான்சாவோ குறிப்பிட்டுள்ளார்.

## குடிவரவு சட்டத்தில் திருத்தம் துரித நடவடிக்கை விரைவில்

சட்டவிரோத குடியேறிகளை தடுத்தல் மற்றும் படகு அகதிகள் தொடர்பாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டமூலத்திற்கு புதிய சட்ட சீர்த்திருத்தங்களை கொண்டு வரவுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதற்காக அமைச்சரவை அனுமதியை பெற்று கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நீதியமைச்சர் அண்மையில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சிலரை சந்தித்திருந்தார்.

இதன்போது, சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக இலங்கை மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கைக்கு அவுஸ்ரேலிய அதிகாரிகள் வர



வேற்பை வெளியிட்டதாக அவர் கூறினார்.

கடந்த காலங்களில், சட்ட விரோத மனித கடத்தல் வர்த்தகத்தை தடுப்பதற்காக பல அமைச்சுக்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்ததாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்

## மங்களவுடன் அமெரிக்கா சென்ற இளைஞன் யார்? குற்றச்சாட்டுகளுக்கு வெளிவிவகார அமைச்சு மறுப்பு

(கொழும்பு)

நியூயோர்க்கில் இளைஞர் ஒருவருடன் காலத்தை கழித்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மறுத்துள்ளார்.

அமைச்சருடன் சென்றிருந்த சமீர மாநகர என்பவரை தொடர்புபடுத்தி சில செய்தி இணையத்தளங்கள் இந்த குற்றச்சாட்டை சுமத்தியிருந்தன. இந்தநிலையில் மங்கள சமரவீர தமது அலுவலகம் ஊடாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், தோல்வி கண்ட மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத் தரப்பினர் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவின் தரப்பினர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது நியூயோர்க் பயணத்தின் போது மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் யாவும் பொதுமக்களின் கவனத்துக்காக முன்வைப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பெப்ரவரி 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையில் தாம் அமெரிக்காவுக்கு சென்று புதிய அரசாங்கத்தின் திட்டங்களை விளக்கியதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்போது தாம் தங்கியருந்த ஹோட்டலில் இருந்தவர்கள் அனைவரும் தமது அதிகாரிகள் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். தாம் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினரை போன்று ஆடம்பர ஹோட்டல்களில் தங்கியிருக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ வெளிநாட்டு பயணத்தின் போது அமைச்சர்களின் சபையில் இருந்து தனிப்பட்ட அதிகாரி ஒருவரை அழைத்துச் செல்வது வழக்கம்.

இதன் அடிப்படையில் நியூயோர்க் விஜயத்தின் போது தாம் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியான சமீர மாநஹர



என்பவரை அழைத்துச் சென்றதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சமீர மாநஹர 2004ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரையான பகுதியில் தாம் துறைமுக அபிவிருத்தி அமைச்சராக இருந்த போதும் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாக பணியாற்றினார். மாநஹர திருமணம் புரிந்து ஒரு பெண் பிள்ளைக்கு தந்தையும் ஆவார் என்று அமைச்சர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## வாகன இறக்குமதிவரி அதிகரிப்பு மனுவை நிராகரித்தது உயர்நீதிமன்று

ஹைப்ரிட் வாகனங்களுக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புக் தெரிவித்து வாகன இறக்குமதியாளர்கள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஹைப்ரிட் வாகனங்களுக்கான இறக்குமதி வரியை 80 சதவீதம் அதிகரிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் தனிப்பட்ட தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு 50 சதவீத வரி நிவாரணம் வழங்கி நிதி அமைச்சர் சுற்றறிக்கை விடுத்துள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஹைப்ரிட் வாகனங்கள் தனியாள பாவனை இறக்குமதியாளர்களுக்கு மாத்திரம்




நிவாரணம் வழங்கியுள்ளமை சட்டவிரோத செயல் எனவும் அது அடிப்படை மனித உரிமை மீறல் என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கருத்துக்களை பரிசீலித்த பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் குழு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் அளவுக்கு மனுவில் நியாயமான சட்ட அடிப்படைகள் இல்லை என்று மனுவை நிராகரித்துள்ளனர்.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, சுங்கப் பிரிவு பணிப்பாளர் நாயகம் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

# விளையாட்டையே விளையாட்டாக எடுக்கத் தெரியாதவர்கள்



விளையாட்டு உடலுக்கும், மனதுக்கும் நல்லது என்பது பொதுவாக மருத்துவ ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்து.

விளையாட்டின்போது உடல் சுறுசுறுப்படைகிறது, பயிற்சி பெறுகிறது, இரத்தச் சுற்றோட்டம் அதிகரிக்கிறது, ஆழமாக மூச்சு இழுத்து விடப்படுகிறது என உடலியல் ரீதியாக பல்வேறு நன்மைகள் விளையாட்டில் ஈடுபடுபவர்களுக்கு கிடைக்கிறது.

இதற்குமப்பால், மன இறுக்கங்கள் குறைந்து, இழகி, நெகிழ்வடைந்து உற்சாகமான மனநிலையும் கிடைக்கிறது.

விளையாட்டுப் போட்டிகள் தவிரவும், இந்த விளையாட்டு என்ற சொல்லுக்கு பொது விடயங்களிலும், விளையாட்டாக கற்றல், விளையாடி விளையாடி வேலைசெய்தல் என்று விளையாட்டு என்பதை நட்பின், உற்சாகத்தின் குறியீடாக கருதும் வழக்கமும் எம்மிடம் இருக்கிறது.

இது விளையாட்டில் நேரடியாக ஈடுபடுபவர்களுக்குத்தான்.

ஆனால், இப்போது நம்மில் பலர் விளையாட்டைப் பார்ப்பதையே பிரதான பொழுதுபோக்காகக் கொண்டிருக்கிறார்கள். மேற்சொன்ன எந்த நன்மையும் உடலுக்கோ, மனதுக்கோ கிடைக்காமல், வெறுமனே ஒரு பொழுதுபோக்காக இந்த பார்த்து அனுபவித்தல் இருக்கிறது.

இதற்குமப்பால், உடல் விளையாட்டில் ஈடுபடாமலே, தாம் சார்ந்த ஒரு அணி வெல்லவேண்டும் என்ற பதற்றம், இரத்த அழுத்தமாக மாறி, சமயங்களில் மன அழுத்தங்களாக விரிந்து உடலுக்கும், மனதுக்கும் பாதகமாக மாறிவிடுகிறது.

இந்த விளையாட்டுச் செய்திகளை அறிக்கையிடும் ஊடகங்கள் ஏதோ இரண்டு நாடுகளுக்கிடையே யுத்தம் நடைபெறுவதுபோல் போர், துவம்சம், பழி தீர்த்தது, பழிக்குப்பழி, சுருண்டது என்ற பதங்களுடன் விளையாட்டுச் செய்திகளை எழுதி, விளையாட்டோடு நேரடியாகச் சம்பந்தப்படாதவர்கள் மனதில் தேவையற்ற குரோத மனோபாவத்தை வளர்த்து வருகின்றன.

எதிரெதிர் அணியினர்கூட விளையாட்டு முடிந்ததும் ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து நண்பர்களாகவே விடைபெறுகின்றனர்.

ஆனால், இந்த விளையாட்டுச் செய்திகளை எழுதும் பத்திரிகைகளும், முகப்புத்தகத்தில் அதுபற்றிய பதிவுகளை வெளியிடும் பதிவர்களும் மாத்திரம் ஏன் விளையாட்டை குரோத மனோபாவத்துடன் பார்த்து பகை வளர்த்துச் செல்கின்றனர்........?


கோ.றுஷாங்கன்

# ரயில் நிலையங்கள் ஏன் இப்படி உள்ளன?

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக வெள்ளவத்தை ரயில் நிலையத்திலும் ஆசனம் முன்பதிவு செய்யலாம் என்றார்கள். சென்று ஏமாற்றத்துடன் திரும்பினேன். மூன்று வாரங்களுக்கு முன்னரே பதிவுசெய்ய வேண்டுமாம்.

பல திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் வெள்ளவத்தை ரயில் நிலையம் வந்திருக்கிறது. இன்றும் அந்த கடற்கரைச்சாலை ரயில் பாதையின் அருகே குடியிருப்புகள் காணப்படுகின்றன. பாதுகாப்பு கேள்விக்குறியாக இருக்கிறது. மக்கள் சர்வ சாதாரணமாக ரயில் பாதையில் நடந்து திரிகிறார்கள். ரயில் வரும்பொழுது, ஒதுங்குகிறார்கள்.

குழந்தைகள் அந்த ரயில்பாதைக்கு அருகாமையில் இருக்கும் குடியிருப்புகளின் முன்னால் விளையாடுகிறார்கள். முன்னரும் இந்தக்காட்சிகளை கண்டிருந்தபோதும் - அவுஸ்ரேலியாவில் குடியேறிய பின்னர் மீண்டும் அதே காட்சிகளை காணும்பொழுது நெஞ்சம் பதறுகிறது. அவுஸ்ரேலியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலும் ரயில் கடவைகளில் அடிக்கடி விபத்தும் உயிர்ச்சேதமும் நடக்கிறதுதான். ஆனால் - ரயில் பதைகளில் உல்லாசமாக நடந்து திரிவது சட்டப்படி குற்றம்.




இலங்கையில் ரயில் மேடைகளில்தான் இறங்கவேண்டும் ஏறவேண்டும் என்ற நியதியும் இல்லை. மேடை இல்லாத மறுபுறத்திலிருந்தும் பயணிகள் ஏறுகின்றார்கள். ரயிலால் இறங்கி தண்டவாளங்களில் நடக்கிறார்கள். விபத்து நடந்தால் ஊடகத்தில் செய்திவரும். அவ்வளவுதான்.

ரயில்வே அமைச்சர்கள் உலக நாடுகளுக்கு பயணிக்கிறார்கள். அந்த நாடுகளில் ரயில் சேவையும் மக்களின் பாதுகாப்பும் எவ்வாறு பேணப்படுகிறது என்பதை தெரிந்து கொண்டு செல்கிறார்களா...? என்பது தெரியவில்லை. எனக்கு வெள்ளவத்தை ரயில் நிலையத்தை பார்த்த பொழுது மிகவும் கவலையாகவே இருந்தது. பராமரிப்பு குறைந்த அந்தக்கட்டடம் எப்பொழுது பூச்சுவேலைக்குட்படுத்தப்பட்டது என்பது தெரியவில்லை. ரயில் மேடை பள்ளமும் திட்டியுமாக காணப்படுகிறது.

இப்படி எத்தனை ரயில் நிலையங்களோ...?

அரசு கடலின் நடுவே கோடிக் கணக்கான டொலர் செலவில் அழகிய நகரம் நிர்மாணிக்க சீனாவின் தயவை நாடியிருப்பதுபோல் இந்த ரயில் நிலையங்களை முறையாக பராமரிக்க ஏதும் ஒரு வெளிநாட்டின் தயவை நாடினாலும் பரவாயில்லை. இலங்கை ஊடகங்கள் ரயில் நிலையங்களின் அண்மைய கோலங்களை படம் எடுத்து செய்திக்கட்டுரை எழுதி அரசின் போக்குவரத்து துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரலாம்.

ஊடகங்கள் அரசியல் வாதிகளின் அறிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குவது போன்று மக்கள் நலன் சார்ந்த புனரமைப்பு தொடர்பான செய்திகளுக்கும் முன்னுரிமை வழங்கலாம்.

முருகபூபதி

# சாதி – நீர் – விஷம் யாரொடு நோவோம்?

1993ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை உலக தண்ணீர் தினமாக பிரகடனப்படுத்தியது. அன்றிலிருந்து இன்றுவரை இத்தினமானது சர்வதேச அளவில் மக்களுக்கான தண்ணீர்ப் பிரச்சினை மீது கரிசனை கொள்ள வேண்டிய தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

நிலத்தடி நீரை அடிப்படையாக் கொண்டியங்கும் மென்பான தொழிற்சாலைகளையும் தண்ணீரை மாசுபடுத்தும் தொழிற் சாலைகளையும் நிறுவனங்களையும் மூடிவிடுமாறு கோரும் விழிப்பு கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் வீதி ஊர்வலங்களும் உலகம் தழுவிய வகையில் இன்றைய தினத்தில்தான் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் புண்ணிய நதிகள் என்றும் தீரா நோய்களையும் தீர்க்கும் வல்லமை கொண்ட மருத்துவ தன்மை வாய்ந்தவை என்றும் போற்றப்பட்ட கங்கை, ஜமுனை, காவேரி அனைத்துமே இறந்த நதிகளாகி விட்டன. உலகப் புகழ் கொண்ட லண்டன் நகரில் ஓடும் தேம்ஸ் நதி இறந்த நதியாகவே அறிவிக்கப்பட்டாகிவிட்டது.

இந்த தேம்ஸ் நதி பற்றி மட்டுமல்ல தனது கிராமத்து தில்லையாற்றங்கரை போன்ற நதிகளை அடிப்படையாகக் கொண்டும் ஈழத்து மூத்த எழுத்தாளியாகிய இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் தனது நாவல்களை படைத்திருக்கின்றார். தமிழ் நாட்டிலுள்ள திருப்பூர் பிரதேசத்தின் பனியன் தயாரிக்கும் சாயத் தொழிற்சாலைகள் எவ்விதம் அப்பிரதேசத்தையும் அங்கு ஓடும் ஆறு குளங்களையும் மாசுபடுத்துகின்றன என்பதை விவரிப்பது சுப்ரபாரதி மணியன் எழுதிய சாயத்திரை என்னும் நாவலாகும்.

இந்த வகையில் நீரின் முக்கியத்துவம் அதன் அவசியம் நீரின் தூய்மை பற்றியெல்லாம் உலகின் நோக்கும் சிந்தனையும் எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கின்ற இந்த காலத்தில் அதுவும் இன்றைய தண்ணீர் தினத்தில்....

நானோ துரதிஷ்ட வசமாக பள்ளி செல்லும் பாலகர்கள் குடிக்கும் நீரிலே நஞ்சினை கலந்த நமது தமிழ்ப் பெருங்குடிகளைப் பற்றி எழுத நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளேன்.

கவுதம புத்தர் ஒரு வழிப்பாதையால் சென்று கொண்டிருக்கும் போது அவருக்கு தண்ணீர்த் தாகம் எடுத்ததாம் அப்போது தெருவில் தண்ணீர்ப் பானையுடன் எதிரே வந்துகொண்டிருந்த ஒரு பெண்ணை அணுகி தாகத்துக்கு கொஞ்சம் தண்ணீர் தர வேண்டும் என்று கேட்டாராம். அப்போது அந்தப் பெண்ணோ "நான் மகர் ஜாதியை சேர்ந்தவள்" என்றாளாம். அதற்கு புத்தரோ நான் உன் ஜாதியை கேட்கவில்லை தண்ணீர்தான் கேட்டேன் என்று பதிலளித்தாராம்.



இந்த கதையிலிருந்து இந்த ஜாதிக்கும் தண்ணீருக்குமான தொடர்பு எத்தகைய பழமை வாய்ந்தது என்பதை நாம் உணர முடியும். அது இன்று ஏழாலையில் வந்து நிற்கின்றது.

இத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் இந்த ஜாதியின் தொடர்ச்சி நிலைத்தே இருக்கிறதே? மாற்றம் ஒன்றே மாறாததென்பர் அறிஞர் ஆனால் நாமோ மாற்றம் என்பது மட்டுமல்ல இந்த ஜாதி என்பதும் மாறாதது என்று புது மொழி படைக்க வேண்டியுள்ளது.

இன்று யாழ் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் தலித் சமூக பச்சிளம் பாலகர்கள் குடிக்கும் நீரில் விஷம் கலக்கப்பட்டிருக்கிறது. சாதி-நீர்-விஷம்-யாரொடு நோவோம்?

மட்டுநகரிலிருந்து எழுகதிரோன்

## இந்தியாவின் தோல்வி; ஆஸி. ஊடகங்கள் கிண்டல்

(சிட்னி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான அரையிறுதி போட்டியில் இந்திய அணி போராடாமல் எளிதாக தோல்வியடைந்து விட்டதாக அந்நாட்டு நாளிதழ்கள் கடுமையாக விமர்சித்துள்ளன.

இந்தியா - அவுஸ்ரேலிய அணிகள் மோதிய அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி இந்தியாவை 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. இது பற்றி கருத்துத் தெரிவித்துள்ள டெய்லி டெலிகிராப் நாளிதழ் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு டோனி மற்றும் ஹோலியின் ஆட்டத்தையே நம்பி இருந்தது. ஆனால் இருவரும் ஏமாற்றிவிட்டனர். மேலும் டோனி துடுப்பாட்டத்தின் போது கடுமையாக போராடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் எளிதாக விட்டுக் கொடுத்து விட்டார் என அந்நாளிதழ் கூறியுள்ளது.

மேலும் ரன் அவுட்டின் போது டோனி டைவ் அடிக்கவோ அல்லது துடுப்பை வைத்து சரித்துக் கொண்டு உள்ளே வரவோ பெரிய அளவில் முயற்சிக்கவில்லை. அவர் கடுமையாக முயற்சித்திருந்தால் நிச்சயமாக ரன் அவுட்டை தவிர்த்திருக்கலாம் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் கெவின் பீற்றர்சன் தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ளது டெய்லி டெலிகிராப்.

மற்றொரு முக்கிய நாளிதழான சிட்னி மார்னிங் ஹெரால்ட், மேக்ஸ்வெல்லின் அற்புதமான த்ரோவால் டோனி அவுட் ஆவது வரையில் அவுஸ்ரேலியா பதற்றமாகவே இருந்தது. ஆனால் அவர் ஏன் ஆரம்பத்தில் இருந்தே அதிரடியாக விளையாடாமல், வினோதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் என்று தெரியவில்லை என்று மார்னிங் ஹெரால்ட் கேள்வி எழுப்பியுள்ளது.

## நியூசிலாந்துடனான இறுதி யுத்தம் சவாலானது

லீக் சுற்றில் நியூசிலாந்திடம் தோற்றது எங்களுக்கு எச்சரிக்கை மணியாக அமைந்தது. சிறப்பாக விளையாட வேண்டும் என்ற உத்வேகத்தை அந்த தோல்வி எங்களுக்கு கொடுத்தது. வீரர்கள் கடுமையாக பயிற்சி செய்ததற்கான பலன் இப்போது கிடைத்திருக்கிறது. இந்தியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றதை அற்புதமான தருணமாக கருதுகின்றேன். நியூசிலாந்து அணிக்கெதிரான இறுதிப் போட்டி சவாலானதாக அமையும் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் கிளார்க் தெரிவித்துள்ளார்.

இறுதிப் போட்டிக்கு முன்னேறியது மகிழ்ச்சியாக உள்ளது. எங்கள் வீரர்கள் அருமையாக விளையாடினர். ஸ்மித்தின் துடுப்பாட்டம் வெகு நேர்த்தியாக இருந்தது. பந்துவீச்சாளர்களின் செயற்பாட்டில் பெருமை அடைகிறேன். இந்த வெற்றிக்காக பலர் பல தியாகங்களை செய்துள்ளனர். கடந்த சில மாதங்களாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய டோனிக்கும் அவரது அணிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த உலக கோப்பையில் டோனி நிச்சயம் விளையாடுவார். அவரிடம் இன்னும் ஏராளமான திறமை எஞ்சியிருக்கிறது. லீக் சுற்றில் நியூசிலாந்திடம் தோற்றது எங்களுக்கு எச்சரிக்கை மணியாக அமைந்தது. சிறப்பாக விளையாட வேண்டும் என்ற உத்வேகத்தை அந்த தோல்வி எங்களுக்கு கொடுத்தது. வீரர்கள் கடுமையாக பயிற்சி செய்ததற்கான பலன் இப்போது கிடைத்திருக்கிறது. அற்புதமான தருணம் இது. இறுதிப் போட்டிக்கு முன்னேறியதற்காக பெருமை அடைகிறோம். நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டம் கடினமான சவாலாக இருக்கும். மெல்பேர்ன் சென்று கொஞ்சம் ஓய்வு எடுத்த பின்னே வலைப்பயிற்சி பற்றி யோசிப்போம். இறுதிப் போட்டிக்கு மனரீதியாக தயாராக இருந்தாலும், உடல் ரீதியாக தயாராவதற்கு சற்று ஓய்வு தேவை. நியூசிலாந்து சிறந்த அணி. அந்த அணியுடனான போட்டி எப்போதுமே விறுவிறுப்பாக இருக்கும். இரசிகர்கள் அதிக அளவில் திரண்டு வந்து எங்களை உற்சாகப்படுத்துவார்கள் என நம்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




## ஆஸி. தக்கவைத்த பெருமை

அவுஸ்ரேலிய அணி இதற்கு முன்பு உலகக்கோப்பை அரையிறுதியில் விளையாடிய 6 முறையும் தோற்றதில்லை. அந்த பெருமையை இப்போதும் தக்க வைத்துக் கொண்டது.

* நேற்று முன்தினம் நடைபெற்ற அரைஇறுதியில் அவுஸ்ரேலியா 328 ஓட்டங்கள் சேர்த்தது. உலக கோப்பை அரையிறுதியில் 300 ஓட்டங்களை கடந்த முதல் அணி அவுஸ்ரேலியா தான். இதற்கு முன்பு இதே உலக கோப்பையில் ஒக்லாந்தில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான அரையிறுதியில் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்கு 299 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

* அவுஸ்ரேலியா இந்த ஆட்டத்தில் 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதே, உலக கோப்பை அரையிறுதியில் ஒரு அணியின் சிறந்த வெற்றியாகும். இதற்கு முன்பு 2003ஆம் ஆண்டு உலக கோப்பை அரையிறுதியில் இந்திய அணி கென்யாவை 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்திருந்தது.



## வக்காரின் அச்சம்

சர்வதேச போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறாமல் இருப்பது கடுமையாக பாதித்துள்ளது. இந்த நிலை நீடித்தால் பாகிஸ்தானில் கிரிக்கெட் செத்துப் போய் விடும் என அஞ்சுகிறேன். சிரேஷ்ட வீரர்களின் திறமை மங்கிப் போய் விடும். சர்வதேச கிரிக்கெட்டை மீண்டும் பாகிஸ்தானுக்குக் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். இந்த விடயத்தில் பாகிஸ்தான் அரசும் உதவ முன்வர வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளார்.

300 ஓட்டங்கள் குவிக்கக் கூடிய அளவிலான அதிரடி வீரர்கள் பாகிஸ்தான் அணிக்குத் தேவை. இதில் இனியும் தாமதம் செய்யக் கூடாது. எங்களுக்குப் பந்து வீச்சு ஒருபோதும் பிரச்சினையாகவே இருந்ததில்லை. துடுப்பாட்டம்தான் கவலையாகவே இருக்கிறது. உலகக் கோப்பையில் பந்து வீச்சாளர்கள் மிகச் சிறப்பாக பந்து வீசியதற்காக பெருமைப் படுகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## களத்திற்கு வெளியில்...

ICC CRICKET WORLD CUP 2015

வெற்றியும், தோல்வியும் வாழ்க்கையில் ஒரு அங்கமாகும் என்று தெரிவித்திருப்பதுடன், உலக கோப்பை போட்டி முழுவதும் இந்திய அணி சிறப்பாக விளையாடியது. அது ஒன்றே போதும். இனி வருத்தப்பட்டு ஒன்றும் ஆகிவிடாது.

**மோடி (இந்திய பிரதமர்)**

இந்திய அணி, இந்த போட்டித் தொடர் முழுவதும் சிறப்பாக ஆடியது. இரசிகர்களும் இதை அனுபவித்து மகிழ்ந்தனர். இருப்பினும் எப்போதும் தோல்வியைச் சகித்துக் கொள்வது கஷ்டமானது தான். இந்தியாவுக்கு இது கடினமான போட்டியாக அமைந்துவிட்டது. இந்த நேரத்தில் அவுஸ்ரேலியாவுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்ரீபன் ஸ்மித்தின் சதம், அவருக்கு ஆரோன் பிஞ்ச் கொடுத்த ஒத்துழைப்பு, ஜோன்சனின் கடைசி கட்ட அதிரடி துடுப்பாட்டம் ஆகியவை இணைந்து இந்தியாவிடம் இருந்து வெற்றியை பறித்து விட்டன.

**சச்சின் டெண்டுல்கர் (இந்தியா)**

சிறந்த இரு அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறியிருப்பதாக கருதுகிறேன். அவ்விரு அணிகளிலுமே மிகச்சிறந்த கப்டன்கள் உள்ளனர். இங்குள்ள சூழலுக்கும் அவர்கள் தான் பொருத்தமானவர்கள். இந்திய அணி சிறப்பாகச் செயற்பட்டது. அதன் தோல்வி தனிப்பட்ட ரீதியில் என்னையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

**ராகுல் ராவிட் (இந்தியா)**

சிறந்த அணியால் இந்தியா ஒட்டுமொத்தமாக தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அவுஸ்ரேலியாவுக்கு முதல் அதிர்ஷ்டம் நாணயச் சுழற்சியை வென்றது. அடுத்ததாக இந்தியாவுக்கு 329 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்தியா முதலில் ஆடி பெரிய ஓட்ட எண்ணிக்கையை குவித்திருந்தால், அவுஸ்ரேலியாவுக்கும் இது போன்ற நெருக்கடி தான் ஏற்பட்டிருக்கும். இந்திய அணியை விட அவுஸ்ரேலியாவின் பந்து வீச்சு கட்டுக்கோப்பாக இருந்தது.

**கங்குலி (இந்தியா)**

இந்தியாவுக்கு இந்தத் தொடர் சிறப்பாக இருந்தது. தோல்வியடைந்த இந்திய வீரர்கள் சார்பில் வருத்தப்படுகிறேன். ஆனால், அவுஸ்ரேலியா அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அந்த அணி இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி வாய்ந்த அணி.

**யுவராஜ்சிங் (இந்தியா)**

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான அரையிறுதியில் இந்திய அணி அனைத்து துறையிலும் தோல்வி அடைந்து விட்டது. ஒரு பலமான இணைப்பாட்டமொன்றை அமைக்க தவறிவிட்டனர். இந்திய வீரர்கள் தேவையில்லாத, பொறுப்பற்ற ஷொட்களை ஆடி அவுட் ஆனார்கள். அவர்களது ஷொட் தேர்வு மிகவும் மோசமாக இருந்தது. மேலும் ஒருவித நெருக்கடியில் இருந்தனர். ஹோலி புல் ஷொட்டை அடிப்பதில் இன்னும் முன்னேற்றம் தேவை. இந்த வெற்றிக்கு அவுஸ்ரேலியா தகுதியானது. அவர்கள் எந்த ஒரு கட்டத்திலும் ஓங்கிய கையை கீழே இறக்கவில்லை.

**கவாஸ்கர் (இந்தியா)**

ரோகித் சர்மாவும், தவானும் நல்ல ஆரம்பத்தை அளித்தனர். இதனால் இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு இருப்பது போல் தெரிந்தது. ஆனால் மொத்தத்தில் இது போன்ற பெரிய ஓட்ட எண்ணிக்கையை விரட்டிப்பிடிக்க வேண்டும் என்றால் முதல் 4 வீரர்களில் யாராவது ஒருவர், ஒரு முனையில் நிலைத்திருக்க வேண்டியது முக்கியம். ஹோலி வந்த வேகத்தில் மோசமாகவும் அவுட் ஆகி சென்றது, இந்தியாவுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

**ஷேன் வோர்ன் (அவுஸ்ரேலியா)**

## சகல துறைகளிலும் கோட்டைவிட்டுவிட்டோம்

### டோனியின் விளக்கம் இது



(சிட்னி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான அரையிறுதியில் இந்திய அணி வேகப்பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்டிருக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக துடுப்பாட்டத்தில் கோட்டைவிட்டுவிட்டோம். இதன் காரணமாக தோல்வியைத் தழுவ வேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டது என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய வீரர்கள் மிகச்சிறந்த கிரிக்கெட்டை ஆடியிருக்கிறார்கள். 300 ஓட்டங்களுக்கு மேலான ஸ்கோரை துரத்திப்பிடிப்பது (சேசிங்) எப்போதும் கடினம். நாங்கள் அதிகமான ஸ்கோரை விட்டுக்கொடுத்து விட்டோம். என்றாலும் ஒரு கட்டத்தில் அவர்கள் 340 முதல் 350 ஓட்டங்கள் எடுக்க வாய்ப்பிருந்தது. அந்த வகையில் அவர்களை கொஞ்சம் கட்டுப்படுத்தினோம். ஆனாலும் பந்து வீச்சில் இன்னும் சிறப்பாகச்செயற்பட்டிருக்க வேண்டும். சுழற்பந்து வீச்சாளர்கள் நன்றாக செயற்பட்ட நிலையில், வேகப்பந்து வீச்சாளர்கள் இதை விட சிறப்பாகச் செயற்பட்டிருக்கலாம்.

எங்களுக்கு கிடைத்த தொடக்கம் பரவாயில்லை. ஆனால் நல்ல இணைப்பாட்டம் அமைந்தால் சேசிங் செய்ய முடியும் என்று நினைத்தோம். அது போன்று எதுவும் நடக்கவில்லை. அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்கள் அபாரமாக பந்து வீசினர். போக போக ரிவர்ஸ், ஸ்விங்கும் செய்தனர். உலக கோப்பை முன்பாக நாங்கள் இவ்வளவு சிறப்பாக ஆடுவோம் என்று யாரும் நம்பவில்லை. இந்த நிலைக்கு வந்ததே மகிழ்ச்சி தான். ஆனால், விலகல் சுற்று ஆட்டம் என்று வரும் போது, இன்னும் மேம்பட்ட ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

ஹோலி ஆட்டம் இழந்த விதத்தை பெரிதாக்கக்கூடாது. அவர் ஆடிய ஷொட்டுக்குரிய பலன் கிடைக்கவில்லை அவ்வளவு தான். கிரிக்கெட்டில் இது போன்று நிறைய துடுப்பாட்ட வீரர்களுக்கு நடப்பது உண்டு.

நாங்கள் 4 மாதங்களுக்கு மேலாக அவுஸ்ரேலிய மண்ணில் விளையாடி இருக்கிறோம். எங்களுக்கு ஆதரவு அளித்த இந்திய மற்றும் அவுஸ்ரேலிய இரசிகர்களுக்கு நன்றி. குறிப்பாக இந்திய அணியின் ஆட்டத்தை காண இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து இங்கு வந்திருந்த இரசிகர்களுக்கு இந்த முடிவு ஏமாற்றம் அளித்திருக்கும். அதே சமயம் எந்த ஒரு ஆட்டத்திலும் ஒரு அணி மட்டுமே வெற்றி பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண வலய மட்ட கரப்பந்தாட்டம்

## கோப்பாய் ம.வி. மூன்று பிரிவுகளில் சம்பியன்

(கோப்பாய்)

யாழ்ப்பாணகல்விவலயபாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் கோப்பாய் மகா வித்தியாலய அணி மூன்று பிரிவுகளில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ்ப்பாணகல்விவலயபாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்பே[illegible] நடைபெற்று வருகின்றன. இதில் ஆண், பெண்க[illegible]கான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் கோ[illegible]ய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன.

ஆண்கள் பிரிவின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் கோப்பாய் மகாவித்தியாலய அணியும் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கோப்பாய் மகாவித்தியாலய அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வெற்றிபெற்று 3ஆம் இடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் பிரிவின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணியும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்தை அச்சுவேலி மத்திய கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

ஆண்கள் பிரிவின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணியும் அத்தியார் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. மூன்றாமிடத்தை அச்சுவேலி மத்திய கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

பெண்கள் பிரிவின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் கோப்பாய் மகாவித்தியாலய அணியும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியும் மோதின. இதில் கோப்பாய் மகாவித்தியாலய அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

பெண்கள் பிரிவின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் கோப்பாய் மகாவித்தியாலய அணியும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கோப்பாய் மகாவித்தியாலய அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

பெண்கள் பிரிவின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியும் மோதின. இதில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் அத்தியார் இந்துக் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. ஏனைய போட்டிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)



## தென்மராட்சி வலய வலைப்பந்து முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான வலயமட்ட வலைப்பந்தாட்டம் கடந்த வாரம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகள் மோதிக் கொண்டன.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் வரணி மத்திய கல்லூரி அணி முதலாமிடத்தையும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அணி இரண்டாமிடத்தையும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் முதலாமிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலாமிடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வரணி மத்திய கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன.

ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டிகள் அண்மையில் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய போட்டிகள் முதலாம் தவணைப் பரீட்சைக்குப் பின்னர் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## கோட்டத்தில் ஜொலித்த மகாஜன வீரர்கள்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளைக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணி அதிக பதக்கங்களை அள்ளி அசத்தியுள்ளது.

தெல்லிப்பளைக் கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி கடந்த வாரம் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் இக்கோட்டத்திற்குட்பட்ட பல வீர,வீராங்கனைகள் பங்கு கொண்டு தமது திறன்களை வெளிப்படுத்தின. இருப்பினும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி வீரர்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் வகையில் தமது பெறுபேறுகளை வெளிப்படுத்தி கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். 135 நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மகாஜனக் கல்லூரி வீர,வீராங்கனைகள் 53 தங்கப் பதக்கங்களையும், 32 வெள்ளிப் பதக்கங்களையும், 22 வெண்கலப் பதக்கங்களையும் வென்று அசத்தியுள்ளனர்.

இவ்வெற்றி குறித்து கல்லூரி அதிபர் மணிசேகரம் கருத்துத் தெரிவிக்கையில், கோட்ட மட்டத்தில் சாதனை புரிந்த வீர,வீராங்கனைகளுக்கு கல்லூரி சார்பில் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப் பெறுபேறுகளை அடுத்துரும் வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என வியாபிக்க வேண்டும். அப்பொழுதுதான் எங்கள் கல்லூரியின் நாமம் தேசிய ரீதியில் அறியப்படும் வகையில் அமையும். கடந்த காலங்களில் எமது கல்லூரி சார்பாக தேசிய மட்ட போட்டிகளில் பல பதக்கங்களை வென்ற வீர,வீராங்கனைகள் உள்ளனர். அதே போன்று இந்த வருடமும் தேசிய மட்டப் போட்டியில் சாதித்து கல்லூரிக்கு பெருமை சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனத் தெரிவித்தார். (93)

## வடக்கு - மலையக நட்புறவு கரப்பந்து விரைவில் ஆவரங்கால் மத்தியில்

(தெல்லிப்பளை)

வடக்கு - மலையகத்தின் நட்புறவை வெளிக்கொணரும் வகையில் மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 9,10ஆம் திகதிகளில் ஆவரங்கால் மத்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த காலப் போரினால் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தன. இதன் காரணமாக விளையாட்டுத் திறன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் வீர,வீராங்கனைகளின் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் வாய்ப்புக்கள் எதனையும் செய்து கொடுக்க முடியாத பெரும் அவல நிலை தோன்றியிருந்தது.

இந்நிலையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இந்த ஐந்து ஆண்டு காலப் பகுதிகளில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு விளையாட்டுத் துறையும் விதிவிலக்காகுமா என்ன? பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் மற்றும் கழக மட்டப் போட்டிகள் என நாடு பூராகவும் நட்பு ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்டு விளையாட்டப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் வடக்கு - மலையக கரப்பந்தாட்ட அமைப்பு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டத் திறனை மேம்படுத்தும் வகையில் நட்புறவுக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரை வெளி மாவட்ட அணிகளுடன் நடாத்தத் தீர்மானித்ததுடன் அதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இதில் அடுத்த மாதம் 9,10ஆம் திகதிகளில் மலையக மற்றும் வடக்கு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் ஆவரங்கால் மத்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் பாடசாலைகள் சார்பாக தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி,புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணிகள் பங்குகொள்ளவுள்ளதுடன் கழக மட்டத்தில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர் புத்தூர் கலைமதி அணிகள் பங்குபற்றவுள்ளன. மலையகம் சார்பாக நுவரெலியா தமிழ்த் யுத் அணி உட்பட பல அணிகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## தள்ளிப்போனது அரை மரதன்

(சுன்னாகம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான அரை மரதன் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், மாகாண பெருவிளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வான அரை மரதன் போட்டி எதிர்வரும் நான்காம் திகதி நடாத்தத் தீர்மானித்திருந்தோம். தவிர்க்க முடியாத காரணத்தினால் இப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது. இப்போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், மடு ஆகிய வலயங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குபெற விருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள வீர,வீராங்கனைகளுக்கு இது ஏமாற்றமாக இருந்தாலும், போட்டிக்கு தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்திருப்பது மகிழ்ச்சி என விளையாட்டு வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## தோல்விக்கு காரணம் இந்தியா; இலங்கையின் பிந்திய கண்டுபிடிப்பு இது

இந்தியாவுக்கு எதிராக அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் தொடர், எங்களது உலக கிண்ண பயிற்சியை பாதித்தது. இது தான் எங்கள் அணி தோல்விக்கு காரணம், என இலங்கை கிரிக்கெட் சபை (எஸ்.எல்.சி.,) நிர்வாகி ஷமி சில்வா தெரிவித்தார்.பொதுவாக இலங்கை அணி உலக கோப்பை தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும். 2003இல் அரையிறுதி (எதிர்-ஆஸி.,), 2007இல் இறுதி (எதிர்-ஆஸி.,), 2011இல் இறுதி (எதிர்-இந்தியா) என, முன்னேறிய இலங்கை அணி இம்முறை காலிறுதியில் தென்னாபிரிக்காவிடம் தோற்றது. 1999இற்குப் பின் முதன் முறையாக அரையிறுதிக்கு தகுதி பெறாதது குறித்து எஸ்.எல்.சி., தலைவர் ஜெயந்தா தர்மதாசவுக்கு எழுதிய கடிதத்தில், ஷமி சில்வா கூறியது: இந்தியாவுக்கு எதிராக அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் தொடரில், இலங்கை அணி 0-5 என, தோற்றது. இது உலக கோப்பை தொடருக்கான உடற்தகுதி முகாமை பெரிதும் பாதித்தது. அரசியல் நெருக்கடி காரணமாக் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அன்னிய பயிற்சியாளர்களின் கீழ் இலங்கை அணி நன்றாகவே செயற்பட்டு வந்த நிலையில், இப்போதைய பயிற்சியாளர் (முன்னாள் வீரர் அத்தப்பத்து) தேர்வும் தவறாக இருந்தது. அணியின் பயிற்சி பணியாளர்களிடம் உட்பூசல் அதிகம் காணப்பட்டது. இதுபோன்ற காரணங்களால் தான் இலங்கை அணி விரைவில் நாடு திரும்பியது. இதுகுறித்து அவசரக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உங்களுக்கு மனஇறுக்கம் உண்டா?

- பேராசிரியர் கே.என். ராமசந்திரன்.




சென்ற ஆண்டின் இடையில் அமெரிக்காவின் பேர்க்லி பல்கலைக்கழகத்தின் சமூகஅறிவியல் மாணவர்கள் ஓர் ஆய்வை மேற்கொண்டனர். அமெரிக்காவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் எல்லாப் பிரிவினரிலிருந்தும் 20 வயதுக்கு மேற்பட்ட 5,000 பேரிடம் வினாத்தாளை வழங்கி விடையளிக்கச் சொன்னார்கள்.

அந்த வினாத்தாளில் பின்வரும் கேள்விகள் இடம்பெற்றன. சின்னச் சின்ன விஷயங்கள்கூட உங்களுக்கு எரிச்சலூட்டுகின்றனவா? இரவில் சரியாகத் தூங்க முடியவில்லையா? காலையில் எழும்போது களைப்பாகவும் சிடுசிடுப்புடனும் இருக்கிறீர்களா? கவலைகள் அதிகமாக உள்ளனவா? பொறியில் சிக்கிய எலியைப் போல உணர்கிறீர்களா? எப்போதும் எதைப் பற்றியாவது குறைசொல்லிக் கொண்டிருக்கிறீர்களா? நண்பர்களிடமும் உறவினர்களிடமும் அடிக்கடி எரிந்துவிழுகிறீர்களா? உங்கள் உடலில் ஏதாவது கோளாறு உள்ளதா?

மேற்கண்ட கேள்விகளில் ஏதாவது ஒன்றுக்கு “ஆம்” என்று பதிலளித்தவர்கள்கூட “தீய இறுக்கத்தால் பீடிக்கப்பட்டவர்கள்” என முடிவுசெய்து, அமெரிக்காவில் கிட்டத்தட்ட 70% பேர் அவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதாகத் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். நாம்கூட, நமக்கு நாமே அவ்வாறு சோதித்துக்கொள்ளலாம்.

### இறுக்கத்திலும் இருவகை

அது சரி, இறுக்கத்தில் தீயது, நல்லது என்றுகூட உண்டா? உண்டு. வாழ்க்கையில் இறுக்கம் ஓர் இன்றியமையாத அம்சம். வீணையின் கம்பியில் இறுக்கமே இல்லாதிருந்தால் நாதம் எழாது. அளவுக்கு மீறிக் கம்பியை இறுக்கினால் அது அறுந்துபோகும். அதேபோல மனதிலும் அளவான இறுக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால் நன்மை உண்டாகும்.

இறுக்கத்துக்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு செயலை வெற்றிகரமாக முடித்தே ஆக வேண்டும் என்று மேலதிகாரி கட்டாயப்படுத்துவது அல்லது நமக்கு நாமே கட்டாயப்படுத்திக்கொள்வது, அந்தச் செயல் வெற்றிகரமாக முடிந்துவிட்டால் அடுத்து மேற்கொள்கிற செயல்களும் அதே போல வெற்றிகரமாக முடிய வேண்டுமே என்று கவலைப்படுவது, குடும்பத்தினருடன் கருத்துவேறுபாடுகள், நடைமுறைக்குச் சரிவராத எதிர்பார்ப்புகள், ஏகப்பட்ட பேரைத் திருப்திப்படுத்த வேண்டியிருப்பது, தூக்கப் பிரச்சினைகள், பணத்தட்டுப்பாடு, சரியான இலக்குகளைத் தீர்மானிக்க முடியாமை, நல்லது - கெட்டது பற்றிய குழப்பங்கள்; சலன மனப்பான்மை போன்றவை அவற்றில் சில.

ஒருவருக்கு மன இறுக்கத்தை உண்டாக்கும் காரணி, வேறு ஒருவருக்கு ஊக்க மருந்தாக அமையக்கூடும். ஒரே காரணி, ஒரே நபருக்கு ஒரு சமயத்தில் இறுக்கத்தை உண்டாக்குவதாகவும், வேறு சமயத்தில் அவ்வாறானதாக இல்லாததாகவும் இருக்கலாம்.

நாளை மாலைக்குள் குறிப்பிட்ட ஒரு வேலையை முடித்துவிட வேண்டும் என்று மேலதிகாரி ஆணையிடும்போது, அதெப்படி முடியும் என்று கவலைப்பட்டு மனம் இறுக்கமடையலாம். இன்னொரு சிப்பந்தி அதையே ஒரு சவாலாக ஏற்று, “நாளை மாலை என்ன, நாளை காலையிலேயே முடித்துவிடுகிறேன்!” என்று உற்சாகமாகச் சொல்லலாம். வேறு ஒரு ஊழியர் “அதிகாரி அப்படித்தான் மிரட்டுவார். ஒரு நாள் தாமதமானால் தலையா போய்விடும்” என்று அலட்சியமாயிருப்பார். அவரே அந்தக் காரியத்தை முடித்துத் தந்தால்தான், உறவினர் திருமணத்துக்குப் போக விடுமுறை கிடைக்கும் என்ற சூழ்நிலையில் இருந்தால் மன இறுக்கமடைவார்.

உண்மையில், நாம்தான் நமது சொந்த விருப்புவெறுப்புகள் அல்லது பாதிப்புகளின் அடிப்படையில் மன இறுக்கங்களை நல்லவையாகவோ தீயவையாகவோ மாற்றிக்கொள்கிறோம். உண்மையில், மன இறுக்கங்கள் நடுநிலையானவையே.

வார நாட்களில் கடிகாரம் மணி 7.45 என்று காட்டினால், பதறி எழுந்து 8 மணி பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமே என்று மன இறுக்கமடைகிறோம். விடுமுறை நாளில் கடிகாரத்தைப் பார்த்த பின் போர்வையை இழுத்துத் தலையை மூடிக்கொண்டு தூக்கத்தைத் தொடர்கிறோம். இவ்விதமாக ஒரே தகவல் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து இறுக்கத்தை உண்டாக்குகிறது அல்லது போக்கிவிடுகிறது.

அதீதமான, அநாவசியமான மன இறுக்கங்கள் இதயத்தையும் சமிபாட்டு மண்டலத்தையும் பாதிக்கும். நட்புகளையும் உறவுகளையும் குலைக்கும். தீய இறுக்கங்களை முழுமையாகத் தவிர்ப்பது உடலுக்கு நல்லது.

### மன இறுக்கத்தைத் தவிர்ப்பது எப்படி?

எதுவும் குறித்த நேரத்தில் நடைபெற வேண்டும் செய்கிற காரியம் அச்சொட்டாக இருக்க வேண்டும் ஆண் பிள்ளைகள் பெற்றோர் சொற்படி நடக்க வேண்டும் பெண் பிள்ளைகள் பொழுது இருட்டுவதற்குள் வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகளைத் தமக்குத் தாமே விதித்துக்கொண்டு அவதிப்படுகிற பெற்றோர்கள், அந்த நிபந்தனைகளை ஓரளவுக்குத் தளர்த்திக்கொண்டு, மன இறுக்கத்தைத் தணித்துக்கொள்ள முடியும். மேலதிகாரிகள் நாளைக்குள் முடி என்று ஒரு வேலையை இன்று கொடுப்பதைத் தவிர்த்து, இரண்டு நாள் அவகாசம் கொடுத்து ஊழியர்களுக்கும் தமக்கும் ஏற்படக்கூடிய மன இறுக்கங்களைத் தவிர்க்கலாம்.

அலுவலகத்துக்குக் காலை 9 மணிக்குப் போக வேண்டியிருப்பவர்கள் பயண நேரத்துக்கேற்ப அரை மணி முன்னதாகவே வீட்டைவிட்டுக் கிளம்பலாம். எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை முதல் நாள் மாலையிலேயே பையில் போட்டுவைத்துவிட்டால், பேனா எங்கே, கடிகாரம் எங்கே என்று கிளம்புகிற சமயத்தில் பதற வேண்டியிருக்காது.

நமக்குத் தரப்பட்ட வேலையை நம்மால் முடிந்த அளவு பொறுப்புடன் செய்துவிட்டு, மன இறுக்கம் இல்லாமல் இருக்கலாம்.

இசை, ஓவியம், விளையாட்டுகள் போன்றவை மன இறுக்கத்தைத் தணிக்க உதவும். விடுமுறை நாட்களில் குடும்பத்துடன் சுற்றுலா செல்வது நல்லது. எந்தக் காரியம் செய்ய முனைந்தாலும் அதைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு பகுதியையும் ஒரு கால அட்டவணைப்படி செய்ய வேண்டும். பணி பெரியதாயிருந்தால் மற்றவர்களை உதவிக்கு அழைத்து சுமையைப் பங்கிட்டுக்கொள்ளலாம்.

தெரியாது, இயலாது ஆகிய சொற்களை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்திப் பல வேளைகளில் மன இறுக்கத்தைத் தவிர்க்க முடியும். தெரியாத வேலையைத் தெரியாது என்றும் இயலாத வேலையை இயலாது என்றும் மேலதிகாரியிடம் ஒப்புக்கொள்வதில் தவறேயில்லை. தெரியாத பணிகள் உள்ள பிரிவிலிருந்து தெரிந்த பணிகள் உள்ள பிரிவுக்கு மாறுதல் பெறலாம் அல்லது பணியைக் கற்றுத்தருமாறு கூறித் தெரிந்துகொள்ளலாம்.

சத்துமிக்க உணவுகளை உண்டு, உடல்வாகுக்கு ஏற்ற பயிற்சிகளை இடைவிடாமல் செய்துவந்தால் ஆரோக்கியம் அதிகரித்து, மன இறுக்கம் தோன்றவிடாது. நண்பர்கள் அல்லது நெருக்கமான உறவினர்களை கட்டியணைப்பதுகூட மன இறுக்கங்களைத் தணிக்க உதவும். என்ன நெருக்கடி வந்தாலும் “இதுவும் கடந்துபோகும்” என்ற உறுதியான எண்ணத்தையும், நமக்கு உதவ உறவினர்களும் நண்பர்களும் உள்ளனர் என்ற துணிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

# இரண்டாயிரத்துக்குப்பின் நாவல்

- ஜெயமோகன் -

2

(நேற்றைய தொடர்ச்சி)

நவீனத்துவ நாவல் என்பது பெருநாவல் மரபுக்கு எதிரான ஒரு போக்கு. அது பெருநாவல் மரபின் இரு அம்சங்களை நிராகரித்தது. 1. வரலாறு 2 புறவயமான யதார்த்தம்.

விளைவாக தனிமனிதனை மையமாக்கிய, அந்தரங்கத்தின் வெளிப்பாடாக மட்டுமே நிற்கக்கூடிய படைப்புக்கள் உருவாகி வந்தன. “தனிமனிதனின் அகம்” என அவற்றை மிகப்பொதுப்படையாக வகுக்க முடியும்.

ஓர் எல்லையில் காம்யூவின் அந்நியன் மறு எல்லையில் ஜோய்ஸின் யுலிஸஸ் ஆகியவை இந்த வகை எழுத்துமுறைக்கான உதாரணங்கள். காம்யூ எண்ணி எண்ணிச் சொல்லும் அகம் ஜோய்ஸால் மொழிப்பெருக்காக மாற்றப்பட்டிருக்கிறது.

இந்தவகையான நவீனத்துவ எழுத்துமுறையே தமிழில் நாவலாக அறிமுகமாகியது. அதையொட்டிய நாவல்களிலேயே நாம் சாதனைகளை படைத்தோம். பொய்த்தேவு (க.நா.சு) தலைமுறைகள் (நீல பத்மநாபன்) ஒரு புளியமரத்தின் கதை (சுந்தர



ராமசாமி) 18ஆவது அட்சக்கோடு (அசோகமித்திரன்) என நமக்கு ஒரு பட்டியல் உள்ளது.

மலையாளத்தில் பெருநாவல் மரபு தகழியின் கயறுடன் முழுமைக்கு வந்தது. ஓ.வி.விஜயனின் கசாக்கின் இதிகாசம் நவீனத்துவ நாவலுக்கான தொடக்கமாக அமைந்தது.

கன்னடத்தில் மண்ணும் மனிதரும் (சிவராம காரந்த்) முழுமையடையச் செய்த பெருநாவல் மரபை அனந்தமூர்த்தியின் சம்ஸ்காரா நவீனத்துவநாவல் வடிவை நோக்கிக் கொண்டுவந்தது.

மகத்தான பெருநாவல்களை உருவாக்கிய வங்க மரபு கணதே வதை, ஆரோக்கிய நிகேதனம் (தாராசங்கர் பானர்ஜி), பாதேர் பாஞ்சாலி (விபூதிபூஷண் பந்தியோபாத்யாய), நீலகண்டப் பறவையைத் தேடி (அதீன் பந்த்யோபாத்யாய) அடுத்தகட்ட நகர்வை சீர்ஷேந்து முகோபாத்யாயவின் கறையான் வழியாக நிகழ்த்தியது.

இந்த வகை எழுத்துமுறை உலகமெங்கும் அடுத்தவகையான எழுத்துக்கு வழிவிட்டது. 1991இல் நான் நாவல் கோட்பாடு என்ற நூலை எழுதினேன். அந்நூலை நவீனத்துவ நாவல் வடிவுக்கு எதிராக அடுத்தகட்ட நாவலெழுத்துக்கான அறைகூவல் என்று சொல்லலாம்.

அன்று நவீனத்துவத்தின் மூன்று அடிப்படைகளும் மறுக்கப்பட்டுவிட்டிருந்தன.

ஒன்று, தனிமனிதன் என்பவன் வரலாற்றால், சூழலால், தற்காலிகமாக வரையறுக்கப்படுபவன் மட்டுமே என்றும் அவன் உறுதியான மாறாத ஓர் அமைப்பு அல்ல என்றும் வாதிடப்பட்டது.

இரண்டு இலக்கியத்தின் மொழி மற்றும் வடிவம் என்பது முற்றா

# ஆளுக்கொரு நீதி!



அமெரிக்க நீதி முறை நிறைய வக்கிரங்களைக் கொண்டது. அதுவும் பெண்கள் தம் பாதுகாப்பை முன்னிட்டு நடவடிக்கைகள் எடுத்தால் அவற்றை அமெரிக்க நீதி முறை கடுமையாகத் தண்டிக்கிறது. இந்த லட்சணத்தில் மற்றைய நாடுகளுக்கு சகிப்புத் தன்மை, நீதி பற்றி பாடம் போதிக்க வருகிறார்கள்.

சமீபத்திய சில வழக்குகளைப் பற்றிப் படித்தால் தெரியும் என்ன வகை வன்முறைகளை அமெரிக்க நீதி முறை கவனிக்காமல் அலட்சியம் செய்கிறது என்று. ஒரு கறுப்புப் பெண் 20 வருடம் ஜெயில் தண்டனைக்கு ஆட்படுத்தப்பட்டார். ஏராளமாக அவருக்கு பொது மக்கள் ஆதரவு தெரிவிக்கப்பட்ட பின் இரண்டு வருடங்கள் சிறை யில் கழித்த பின் அவர் விடுவிக்கப்பட்டார். அவர் செய்த குற்றம்- அவருடைய முன்னாள் கணவர், அவரைப் பல முறை தாக்கிக் காயப்படுத்தியவர், அவர் வீட்டில் கதவை உடைத்துக் கொண்டு நுழைந்து அவரை அச்சுறுத்த முயன்ற போது துப்பாக்கியால் கூரையை நோக்கிச் சுட்டு எச்சரித்ததற்காக அந்த தண்டனை.

ஆனால் இன்னொரு வழக்கில் வெள்ளையர் ஒருவர் தெருவோடு போன கறுப்பு இளைஞனைத் துரத்தி, அனாவசியமாக வம்பிழுக்கப் போன போது நடந்த கைகலப்பில் அந்த கறுப்பு இளைஞனை வெள்ளை ஆண் சுட்டுக் கொன்றுவிட்டு ஒரு தண்டனையும் இல்லாமல் தப்பித்து விட்டார்.

ஆண்களின் வன்முறை கூட வெள்ளையராக இருந்தால் ஒரு நீதி, கறுப்பராக இருந்தால் இன்னொரு நீதி என்பது அமெரிக்கக் கறுப்பருக்கு ஏற்கனவே தெரியும். இவர்கள் ஏனைய நாடுகளைப் பற்றிய ஆவணப் படங்கள் எடுத்து அந்தந்த நாடுகளின் அக்கிரமமான சமூகத்தின் அவலங்களை உலகுக்கு எடுத்துரைக்கிறார்களாம். என்ன ஒரு அகம்பாவமும், மதர்ப்பும். மருத்துவரே முதலில் உம் நோயைக் குணப்படுத்திக் கொள்ள வழியைப் பாரும் என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

---

னது அல்ல. அது அந்தக் காலகட்டத்தின் விளைவாக உருவாகக் கூடியது. ஆகவே கச்சிதமான வடிவம் மொழி என ஏதும் இல்லை.

மூன்று, இலக்கியம் முன்வைக்கும் மையத்தரிசனம் என்பது அப்படைப்புக்குள் மட்டுமே செல்லுபடியாகக் கூடியது. புனைவுக்கு நேரடியான தத்துவமதிப்பு என ஏதுமில்லை.

இந்த மூன்று அடிப்படைகளும் அழிந்தபின்னர் எழுதப்படும் நாவல் என்னவாக இருக்கும்? அது மீண்டும் ஒருவகை பெருநாவல் என்று எண்ணினேன்.

1 அது வரலாற்றை உருவாக்கும்.
2 தரிசனத்தை முன்வைக்கும்.
3 முழுமையை நோக்கிச் செல்லும் வடிவம் கொண்டிருக்கும்.

ஆனால் இவை எல்லாமே புனைவின் விளையாட்டுக்கள் என்றும் தெரிந்துவைத்திருக்கும். ஆகவே அது வரலாற்றை ஒரு ஆட்டமாக முன்வைக்கும். மையத்தரிசனத்தை உருவாக்கியும் மறுத்தும் விரிவான விவாதத்தை உருவாக்கும். முழுமை நோக்கிச் செல்லும் வடிவத்தை ஒருமை வழியாக அல்லாமல் கூட்டுத்தன்மை வழியாக கலைதல் வழியாக அடைய முயலும்.

அவ்வகையில் சமீபத்தில் வந்த பலநாவல்களை குறிப்பாகச் சுட்ட முடியும். பூமணியின் அஞ்ஞாடி ஒரு நிகர்வரலாற்றை உருவாக்குகிறது. சோ.தருமனின் கூகையில் கூடவே ஒரு மெல்லிய பகடியும் ஓடிச்செல்கிறது. முருகவேளின் மிளிர்கல் உண்மையான வரலாற்றை தொன்மமாக ஆக்க முயல்கிறது. கௌதம் சன்னாவின் சமீபத்திய நாவலான குறத்தியாறு நாட்டார் தொன்மத்தைக் கொண்டு ஒரு வரலாற்றை உருவாக்க முயல்கிறது.

இதையொட்டித்தான் இலக்கியத்தின் வரலாற்று மதிப்பு என்ன என்ற வினா எழுகிறது. தங்கள் வரலாற்றை எழுத்தாளன் திரித்து எழுதுகிறான் என்று மக்கள் தெருவுக்கு இறங்குகிறார்கள்.

நாவல் என்பதே ஒரு வகையில் திரிக்கப்பட்ட வரலாறுதான். ஆசிரியனின் பார்வைக்கு ஏற்ப, அவனுடைய இலக்குக்கு ஏற்ப அதை மாற்றியமைப்பதே கலை எனப்படுகிறது. அதை இனிமேல்தான் நாம் பேசிப்பேசி நிறுவவேண்டியிருக்கிறது.

ஆனால் இதை ஒரு புனைவுவிதியாகச் சொல்லமாட்டேன். ஏனென்றால் கலை என்பது இத்தகைய நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டது. இது ஒரு பொதுப்போக்கு மட்டுமே. இப்பொதுப்போக்கை அடையாளம் காட்டமட்டுமே செய்கிறேன். இது ஏன் நிகழ்கிறது, இதன் வண்ணவேறுபாடுகள் என்ன, கலைமதிப்பு என்ன, இதற்கும் நம் பண்பாட்டுக்குமான ஊடாட்டம் என்ன என்பதெல்லாம் மேற்கொண்டு ஆராயவேண்டியவை.

ஏனென்றால் நான் கடைசியாக வாசித்த் நல்ல தமிழ்நாவல் தேவிபாரதியின் நிழலின் தனிமை. எல்லாவகையிலும் அது பழைய பாணி நவீனத்துவ அமைப்புள்ளது. உறுதியான ஒற்றைப்படைக் கதை. திருப்பம் கொண்ட சினிமாப்பாணி கட்டமைப்பு. தனிமனிதனின் அகக்கொந்தளிப்பு. ஆனால் அதன் உண்மையின் வீரியம் அதை முக்கியமான கலைப்படைப்பாக ஆக்கியிருக்கிறது. இலக்கியக்கொள்கைகளை விவாதிக்கலாம். படைப்பு கலையாக ஆகும் விந்தையை விவாதிக்கவே முடியாது.

---

# கழிவு அரசியல் தந்திரமும் திருப்பித் தாக்கிய பூதமும்



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

கழிவு ஓயில் பிரச்சினை கழிவு அரசியலுக்கு நல்லாய்ப் பயன்படுகுது எண்டு சில மாதங்களுக்கு முன்னுக்கு இந்தப் பத்தியிலை சொன்னனான் பாருங்கோ! அது இப்ப நல்லாய்த் தெரியுது.

சும்மா கொல்லையிலை கிடந்த இரும்புக் கம்பியை எடுத்து வளைச்சு சூலமாக்கி விட்டால் அது கோழி தா... சாராயம் தா எண்டு கேக்குமாம் எண்டு கிராமத்திலை சொல்லுவினை. அப்பிடித்தான் இந்த கழிவு கட்டையளையெல்லாம் அரசியலுக்கை கொண்டு வந்திட்டு நாங்கள் அந்தரப்பட வேண்டிக் கிடக்குது எண்டிறார் ஒரு பொதுமகன்.

பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் மாறினது போலையோ, கிணறு வெட்டப் பூதம் கிளம்பினது போலையோ போச்சுது கழிவு ஓயில் விவகாரம். இப்ப அது பூமராங் போலை ஐங்கரனையும், அவையின்ரை ஆக்களையும் திருப்பி அடிக்குது.

கழிவு ஓயில் விவகாரத்தை மகிந்த அரசாங்கத்தை அகற்றிறதுக்கான ஒரு கருவியாய் கையிலை எடுத்த ஐங்கரன் ஆக்கள் கிணறெல்லாம் மாசு எண்டு பெரிசாய் ஊதிப் பெருப்பிச்சினை. இருண்டவன் கண்ணுக்கு மருண்டதெல்லாம் பேய் எண்ட கதை போலை எங்கையோ இருக்கிற சனமெல்லாம் தங்கடை கிணத்துக்கையும் ஓயில் இருக்குதோ எண்டு அலமலக்கிற வகையிலை இதைப் பூதாகாரமாக்கினதிலை ஐங்கரனுக்கு பெரும் பங்கிருக்குது.

ஆனால் சுத்தி வர இருக்கிற கிணறுகளிலை ஓயில் இருக்குது. பார்த்தாலே தெரியுது. சுத்துப் பட்டியிலை இருக்கிற கிராமங்களிலை நீர் ஆய்வு முடிவுகள் கணிசமான கிணறுகளிலை ஓயில் இருக்குது எண்டதை உறுதிப்படுத்துது. 2009 இலையிருந்து இது மெல்ல மெல்ல பரவியிருக்குது. இதை அரசியல் மூலதனமாக்க நினைச்ச ஐங்கரன் ஆக்களுக்கு நினைச்ச அளவுக்கு லாபம் கிடைக்கேல்லைப் பாருங்கோ! இது மகிந்தவின் தம்பியின்ரை வேலை எண்ட மாதிரி சனத்திட்டை விடப்பட்ட கதையாலை சனம் மகிந்தவுக்கு எதிராக வாக்களிச்சது எண்டதைத் தவிர வேறை ஒண்டும் நடக்கேல்லை.

இது ஒரு பேரிடராகக் காட்டப்பட்டால் மாகாண அமைச்சுக்கு மத்திய அரசாங்கத்திட்டையிருந்தும், வேறை உலக நாடுகள், நிறுவனங்களிட்டையிருந்தும் இடர் உதவிகள் கிடைக்கலாம். அந்த உதவியளை வழங்கி வச்சு மக்களின்ரை வாக்குகளைக் கவரலாம். புலம் பெயர் சக்திகள் இதை ஒரு பிரச்சினையாகக் கையிலை எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுறதுக்கெண்டு அரசாங்க நிதி நடைமுறைகளுக்குள் அகப்படாமல் நேரடியாக சொந்தக் கணக்குகளுக்கோ, வரும் போது நேரடியாகவோ கொடுப்பதன் மூலம் நிதி வளத்தைப் பெருக்கலாம் எண்டெல்லாம் பொரிமாத் தோண்டி போலை கண்ட கனவுகள் பலிக்கேல்லை.

கழிவு ஓயில் சூலத்தைக் குத்தி ஆடு, கோழி கேட்ட சாமியார் ஒண்டும் கிடைக்காட்டால். என்ன செய்யலாம்? சூலத்தை நிமிர்த்தி "அது வெறும் கம்பிதான் பாருங்கோ" எண்டு சொல்லத்தானே வேணும். அதுதான் இப்ப நடக்குது பாருங்கோ!


எதையுமே சரியாக அறிஞ்சு கொள்ள முடியாத சாதாரணமான ஒரு கருவியைக் கொண்டு வந்து அளந்து பார்த்து கிணறுகளிலை ஓயில் இல்லையெண்டு சொல்லுறது எந்தளவுக்கு நியாயமானது? இந்த நிபுணர்கள் தமது ஆய்வு முடிவுகளை யாருக்குச் சார்பாகச் சொல்லியிருக்கினை? இந்தக் குழு பகிரங்கத்தன்மையோடை செயற்பட்டதா? எண்டு பல பக்கங்களிலை இருந்தும் கேள்வி எழும்பியிருக்குது.

பனங்கொட்டை யாழ்ப்பாணியள் எலெக்சனிலை நாங்கள் என்ன சொன்னாலும் எங்களுக்கு வாக்குப் போடுறதுகள்தானே! இதையும் ஓமெண்டு கேட்டுத் தலையாட்டுங்கள் எண்டு நினைச்சதிலை மண் விழுந்து போச்சுது. இந்த டாக்குத்தர்மார் கொஞ்சப் பேர் கிளம்பிக் கேள்வி கேக்கினை.

ஏற்கனவே உண்ணாவிரதம் இருந்தவையை சத்தியரைக் கொண்டு அமத்திக் குத்தியாச்சுது. இப்ப என்னடாவெண்டால் சுன்னாகத்திலை இருந்து பாதிக்கப்பட்ட டாக்குத்தர் ஒருதர் குரல் குடுக்கிறார். போதாக்குறைக்கு வேறை டாக்குத்தர்மாரும், டாக்குத்தர் சங்கமும் கேள்வி எழுப்பியிருக்குது.

சாதாரணமாய் ஏ.எல்லிலை இரசாயனவியல் படிக்கிற பிள்ளைக்கே பெற்றோலியப் பொருட்களிலை இருக்கிற நச்சுப் பதார்த்தங்கள் பற்றித் தெளிவாய்த் தெரியும். இந்த அறப் படிச்ச நிபுணர்களுக்கு அது தெரியாதோ? எண்டு நாக்குப் புடுங்கிற மாதிரிக் கேக்கினை.

எங்கடை விவசாய அமைச்சர் தாவரவியல்காரன். அவருக்கு தாவரங்கள் பற்றித் தெரியும். பெற்றோலியம் பற்றித் தெரியத் தேவையில்லைத்தானே. சின்ன மருத்துவர் எல்லா நோயாளிகளுக்கும். மருந்து தருவார். வைத்திய நிபுணராகி விட்டால் அவர் அந்தத் துறைக்குமட்டுந்தான் மருந்து தருவார். அது போலைத்தான் நிபுணர்களுக்கு ஒரு பக்கம் மட்டுந்தான் வெளிச்சமாயிருக்கும். அவையிலை கோபிக்காதேங்கோ டாக்குத்தர் ஐயாமாரே! மெய்ய ஐங்கரன் அண்ணை! வன்னிச் சிற்றரசன் சிறியண்ணையோடை ஒரு ரோக் போட்டு இரணைமடுத் தண்ணியை பவுசர்களிலையோ, குழாயிலையோ எடுத்தால் என்ன? தொப்புள் கொடி அறுந்து போடுமோ?



# புதிர்ப்போட்டி இல. 33

**அனுப்பவேண்டிய முகவரி**
புதிர்ப்போட்டி இல:
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

**(01). ஒரு இரகசியக் குறியீட்டு முறையில் தரப்பட்டுள்ளவற்றிற்கெதிரே சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

சங்கடம், பம்பரம், மாமாங்கம், சம்பளம், சம்மானம், பங்கயம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | A | F | G | W | F |
| 02) | L | L | B | D | F |
| 03) | C | F | G | P | F |
| 04) | G | B | D | X | F |
| 05) | A | F | L | Z | F |
| 06) | A | B | D | E | F |

**(02). கேள்வி அடையாளமிட்ட இடத்தில் பொருத்தமான எண்களை இடுக.**

| | | | |
|---|---|---|---|
| 07) | 0.2 | 0.4 | 0.6 |
| | 0.7 | 0.6 | 0.1 |
| | 0.3 | 0.2 | ? |
| 08) | 8 | 14 | 16 |
| | 6 | 10 | 15 |
| | 8 | 64 | ? |

**(03). கருத்தமைந்த சொல்லாக மாற்றுக.**

09) யை த பி ற ே
10) ணு ம் ா இ ர வ
11) ம ம ம் த ச ர்
12) ள ச ய ொ ல ர்
13) ட் ண் ப் நு சை ம ரீ தி ப

**(04). அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களுள் ஒவ்வொரு கூற்றையும் சரியாகப் பூர்த்தி செய்யும் சொல்லின் கீழ்க் கோடிடுக**

14) துக்கத்துக்குக் கறுப்பு, சமாதானத்துக்கு (மஞ்சள், வெள்ளை, நீலம், குருத்துப்பச்சை)
15) புகையிரதத்துக்குப் புகையிரத நிலையம், கப்பலுக்கு (கடல், துறைமுகம், பிரயாணம், மீகாமன்)
16) சமுத்திரத்திற்கு வாவி, கண்டத்திற்கு (நாடு, தீபகற்பம், தீவு, குடா)
17) பூனைக்குக் கடுவன், மானுக்கு (கலை, சின்னமான், பெரியமான், ஏறு)
18) கிழமையில் சனி, கோள்களில் (பூமி,வியாழன்,யூரேன்,புளூட்டோ)
19) நாற்புறமும் கடல் தீவு மூன்று புறம் கடல் (கடலேரி, தீபகற்கம், தீவுமேடு, மேட்டுநிலம்)
20) கிராமோதயத்திற்கு பிரதேச சபை, வானிலைக்கு (காலநிலை, மழைவீழ்ச்சி, வெப்பநிலை, இக்ளு)
21) தத்துவத்திற்கு அரிஸ்டோட்டில், ஓவியத்திற்கு (மரடோனா, பிளேற்டோ, இலியானானோ, டாவின்சி, தனாகா)

**(05). கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வரிசையிலும் உள்ள சொற்களில் ஒத்தகருத்துள்ள இரு சொற்களைத் தெரிவு செய்து அவற்றிற்குரிய இலக்கத்தை எழுதுக.**

உதாரணம் :- முட்டுக்கட்டை, தூண்டுகோல், இடையூறு, தடுமாற்றம், ஏமாற்றம் இதில் முட்டுக்கட்டை, இடையூறு ஆகியன ஒத்தகருத்துடையன அச்சொற்களுக்குரிய இலக்கம் 1,3 ஆகும்

22) இலக்கு, எல்லை, மேல்மட்டம், குறிக்கோள், செயற்பாடு
23) செவியுறல், இகழ்தல், ஏற்றல், மகிழ்தல், உதாசீனம்
24) விகற்பம், சங்கமம், கூட்டம், தர்க்கம், குதர்க்கம்
25) அக்கறை, சிரத்தை, கரிசனை, அறிவாற்றல், ஆர்வம்
26) பெரும்பாவம், தலைக்கிறுக்கு, ஆவணம், அகம்பாவம், முகபாவம்
27) பரிசு, பதக்கம், பேருவகை, புகழ், இறும்பூது
28) நல்குரவு, வறுமை, நோய், ஆண்குழந்தை, சிறுபிள்ளைகள்

**(06). பின்வரும் நுண்மதிக்கணக்குகளைத் தீர்த்து, உமது விடையைக் கொடுக்கப்பட்ட புள்ளிக்கோட்டில் எழுதுக**


29) பிரசாந் உமாகாந்தனிலும் உயர்ந்தவன், பிரசாந் கபில்தேவிலும் உயர்ந்தவன். அமர்நாத் உமாகாந்திலும் உயர்ந்தவன். ஆனால் கபில்தேவிலும் கட்டையானவன். இவர்களுள் மிகவும் கட்டையானவர் யார்?


30) ஒருகடையில் அங்கர் டின்கள் ஒரு வரிசையில் 7உம், அடுத்த வரிசையில் 6உம் என்ற ஒழுங்கில் மேல் வரிசையில் ஒரு டின் வரும்வரை அடுக்கப்பட்டிருந்தது. கீழ் வரிசையில் 9 டின்கள் இருப்பின் மொத்த டின்கள் எத்தனை?


31) பிரதான வீதியின் இடது புறத்தில் அஜந்தா மாளிகை உள்ளது. எதிர்ப்புறத்தில் அவரது வீடு உள்ளது. வீட்டிலிருந்து வெளிப்பட்டதும் இடது புறத்தில் சூரியன் உதித்தால் மாளிகை வாசல் எத்திசையை நோக்கி உள்ளது?

32) ரூபா 39.00 = 1 ஸ்டேலிங் டொலர் = 1 ஸ்டேலிங் எனவும் நாணயமாற்றுவீதம் அமைந்துள்ளது. 39 டொலருக்கு எத்தனை ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும்?

**(06). வினாக்குறியுள்ள இடங்களில் பொருத்தமான எண்களை இடுவதன் மூலம் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை தருக**

33.



34.



35.



36.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 81 | 10 | 19 | 74 | 10 | 26 | ? | 10 | 35 |

# சென்றவார விடைகள்

(01).01. 12 02. 720 03.28 முதலாவது தடவை மணி அடிக்க நேரம் எடுக்காது ஆகவே ஒருமுறை அடிக்க 4 செக்கன் எடுக்கும்
(02).04.மேற்கு 05.200 06.50,000
(03).07.ஈ 08.ஆ 09.ஆ (04).10.5 11.2
12.10 13.9 14.4 15.8
16.முடிவிலி 17.1 18.7 19.3
(05).20.54 21.30 22.12 23.7
(06).24.83 25.3 26.102 ஏனையவை ஒற்றை எண்கள்
27.4.7வித்தியாசம் 0.9 28.0.00315 29.2 ஏனையன ஒற்றை எண்கள் 30.31 ஒழுங்கற்ற முறையில் அதிகரித்துள்ளது
31.79118 ஒன்று என்ற எண் இருதடவைகள் வந்துள்ளது
32.11/13 33.0.36 இரட்டை எண்கள் (07).34.T முதல் இரு எழுத்துக்களைக் குறிக்கும் இலக்கங்களைக் கூட்டி 3ஆவது எழுத்தைக் காணுதல் 35.D எழுத்துக்களின் வித்தியாசம் 1,2,3,4 ஆல் அதிகரித்துப் பின்னர் 4,3,2,1 ஆல் குறைதல்
36.I எழுத்துக்கள் 1,1,3,1,3,5,1,3,5,7 என்ற ஒழுங்கில் அதிகரித்தல்
37.Z பின்னிலிருந்து 1,2,3,4,5,6,7 ஐக் கழித்து வருதல்
38.A வர்க்கமும், வர்க்கமூலமும் (08).39.பிணக்கம்
40.பிரதிகூலம் 41.வெட்பம் 42.அருட்சி
43.ஒருப்பாடு 44.செம்மாப்பு 45.ஒருசீர்மை
46.அருமை 47.வரட்சி 48.நாயின் உரிமையாளர் நாயின் வாலைப் பிடித்துக்கொண்டு ஒரு சுழற்று சுழற்றி தரையில் அடித்துக் கொன்று இருப்பார். இந்த முறையில் அரசன் நாயின் உரிமையாளரை கொல்ல முடியாது. 49. பூனைக்கு பதினேழு கால், 17x1/4 = 4 1/4. எனவே, பூனைக்கு 4 கால். பூனையைப் போல் யானைக்கும் 4 கால்.
புள்ளினத்துக்கு ஒன்பது கால், 9x1/4 = 2 1/4. எனவே, பறவைகளுக்கு 2 கால்.
ஆட்டுக்கு கால் இல்லை...ஆடு என்ற சொல்லில் துணைக்கால் இல்லை, எனவே ஆட்டுக்கு கால் இல்லை.
மாடு என்ற சொல்லில் ஒற்றைக் கொம்போ, இரட்டைக் கொம்போ இல்லை, எனவே மாட்டுக்கு கொம்பில்லை.

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- த.ஜனனி
தரம் :- 10
பாடசாலை :- யா / சன்மார்க்க மகாவித்தியாலயம்

பெயர் :- ஆ.சுவேதிகா
தரம் :- 09
பாடசாலை:-யா/வேம்படி மகளிர் கல்லூரி

பெயர் :- கா.தேனுகா
தரம் :- 09
பாடசாலை:-யா/வேம்படி மகளிர் கல்லூரி

## விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ..............................
பாடசாலை :- ..............................
கல்வி கற்கும் தரம் :- ..............................
வீட்டு முகவரி :- ..............................
தொ.பேசி இலக்கம் :- ..............................

# டெங்கு நோய்த்தாக்கத்தை தடுக்க

# நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு

எதிர்வரும் தென்கிழக்கு பருவ மழையைத் தொடர்ந்து நாடெங்கும் டெங்குநோய் பரவக்கூடிய ஏதுநிலை காணப்படுவதால் இவ அபாய நிலையைத் தடுக்கும் நோக்குடன் சுகாதார அமைச்சினால் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நேற்று முன்தினம் ஏப்ரல் 01 ஆம் திகதிவரை பிரகடனப்படுத்தப்பட்டு இக்காலப் பகுதி முழுவதும், அதன் பின் தொடர்ச்சியாகவும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முழுஅளவில் நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மார்ச் 26,27,28 ஆம் திகதிகளில் தெரிவு செய்யப்பட்ட மிக அதிக ஆபத்தான பிரதேசங்களிலுள்ள வீடுகள், பாடசாலைகள், வேறு கல்வி நிறுவனங்கள், அரச தனியார் நிறுவனங்கள், கட்டடநிர்மாண வேலைநடைபெறுமிடங்கள், தொழிற்சாலைகள், மதவழிபாட்டுத் தலங்கள் ஏனைய பிற இடங்களை குழுக்களாகச் சென்று பரிசோதனை செய்து நடவடிக்கைகள் எடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

மார்ச் 29 ஆம் திகதி பொது இடங்கள், வழிபாட்டுத் தலங்க வடிகால்கள், மயானங்களை ழக்களாகச்சென்று பரி ாதனை செய்து நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மார்ச் 30, 31, ஏப்ரல் 1 ஆம் திகதிகளில் தெரிவுசெய்யப் பட்டஆபத்தான, ஏனைய இடங்களிலுள்ள வீடுகள், பாடசாலைகள்,வேறு கல்வி நிறுவனங்கள், அரச தனியார் நிறுவனங்கள், கட்டட நிர்மாண வேலை நடைபெறுமிடங்கள், தொழிற்சாலைகள், மதவழிபாட்டுத்தலங்கள் ஏனைய பிற இடங்களை குழுக்களாகச் சென்று பரிசோதனை செய்து நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நுளம்புக்கட்டுப்பாட்டு நடவடிக்கை குழுநடவடிக்கைகளில் குடியிருப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நிறுவனங்களின் டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு குழு உறுப்பினர்கள், பொலிஸ், முப்படைவீரர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், தொண்டர்கள், உள்ளூராட்சி ஊழியர்கள், கிராமிய டெங்குக் குழு உறுப்பினர்கள், மதத்தலைவர்கள், சமூகத் தலைவர்களின் பங்களிப்பைப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட மட்டமற்றும் பிரதேச மட்ட குழுக்களை அழைத்து கலந்துரையாடி இவ் வேலைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதுடன் இத்துப்பரவு வேலைத்திட்டத் திற்கு அனைவரும் ஆக்கபூர்வமான பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கி நுளம்புப் பெருககத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இவ் வேலைத்திட்டம் •வெற்றி பெற ஒன்றிணைந்து செயற்படுவோம் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## தாயாருடன் இணைந்தார் விபூசிகா



விபூசிகாவின் தாயார் ஜெயகுமாரி விடுதலையைத் தொடர்ந்து, தனது மகள் விபூசிகாவை தன்னிடம் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் கோரியிருந்தார். மாவட்ட நீதவான் குறித்த வழக்கினை நேற்றுமுன்தினம் வரை தவணையிட்டிருந்தார். கிளிநொச்சி மாவட்ட நீதவான் எம்.ஐ.வாகாப்தீனால் இவ் வழக்கு மீண்டும் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றத்தடுப்பு பிரிவு பொலீஸாரினால் கிளிநொச்சி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிறுத்திக் கொள்ளப்பட்டதனை தொடர்ந்து விபூசிகா தாயருடன் நீதிமன்றினால் இணைக்கப்பட்டார். (29)

## ஸ்ரீராமநவமி பூசை

அளவெட்டி மேற்கு - நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் வேதஸ்தானத்தில் இன்று ஸ்ரீராம நவமி பூசை பக்திபூர்வமாக அனுட்டிக்கப்படவுள்ளது.

காலை 7.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் பூசைகள் தொடங்கும் 9.00 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, ஸ்ரீமத் நாராயண சுவாமி ஸ்ரீதேவி பூமாதேவி சமேதராய் அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (68)

# எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ளது

### சிறுவர்நல பராமரிப்பு திணைக்களம் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக சிறுவர் நல பராமரிப்பு திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் தெரிய வருவதாவது,

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் பிறக்கின்ற எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிறக்கின்ற எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பிறக்கின்ற எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 16.5 சதவீதமாக காணப்படுவதாகவும் வடக்கு, கிழக்கில் பிறக்கும் எடை குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை 18 சதவீதமாக அதிகரித்து இருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



யாழ். பல்கலைக்கழக மொழியியல் ஆங்கில சமூகத்தினரின் ஏற்பாட்டில் எஸ். பத்மநாதனின் (சோ: பா)வின் மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டின் முதல் பிரதியை அண்ணா தொழிலக அதிபா எஸ். பி.நடராசா முதல் பிரதியை பெற்றுக்கொள்கின்றார். இந்நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் திங்கள் மாலை நடைபெற்றபோது... (105)

## வாரம் ஒரு காரம்

### வாய்ப்பேச்சில் மட்டும்தான் இன்று வடமாகாணசபை நிமிர்ந்து நிற்கின்றது

- வலி. வடக்கு மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வில்லை
- கண்டாவளையில் உள்ள கல்லாறு மக்களிற்கு குடிநீரே இல்லை
- வடமாகாணத்தில் பல பாடசாலைகளில் பாடரீதியாக ஆசிரியர்கள் இல்லை
- அதிபர்கள் இல்லை
- கல்விப்பணிப்பாளர்கள் இல்லை
- ஏன் தற்போது மாகாணக் கல்விப்பணிப்பாளர் கூட இல்லை
- வெளிமாவட்ட தெருவோர வியாபாரிகளால் வரிகட்டி. வாடகை குடுத்து வியாபாரம் செய்யும் வர்த்தகரின் பாதிப்புத் தொடர்பாக முன்வைக்கப்பட்டது அதற்கின்னும் எந்தத் தீர்வுமில்லை
- காணாமற்போனோர் தொடர்பாக எந்த முடிவுமில்லை
- தமிழர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தெளிவு கூட • இல்லை

இவ்வாறிருக்கும் போது மாகாண ஆட்சி என்கின்ற பெயரில் ஒரு சுயாட்சி எதற்காக? என்கின்ற நிலை பரவலாக மக்கள் மத்தியில் தோற்றம் பெற ஆரம்பித்துவிட்டன.

அன்று மகிந்தாவின் ஆட்சியில் அதிகாரமில்லை என்றார்கள். மத்திய அரசோடு மாகாணத்துக்கு சீரான இணக்கமில்லை என்றார்கள். இன்று எதைச்சொல்லப்போகின்றார்கள் விசேடமாக தேசிய 'நிறைவேற்று அதிகார சபையில் கூட இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளது. இது போதாதா?....

கோடிக்கணக்கான பெறுமதி கொண்ட A.C வாகனங்களை மத்திய அரசிடமிருந்து மாகாண சபை உறுப்பினர்களிற்கு பெற்றெடுக்க அதிகாரமுண்டு ஆனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றத்தான் உங்களிற்கு அன்றும் அதிகாரமில்லை இன்றும் அதிகாரமில்லையா?......

எந்தவொரு செயற்பாடுகளும் முற்றுப்பெறாமல் முடங்கிக்கிடக்கும் மாகாணமாக இன்று வடமாகாணம் திகழ்கின்றது. இங்கு வெறும் வாய்ப் பேச்சுக்ளைத் தவிர எதுவும் மிச்சமில்லை என்பதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளர்கள் கூட விமர்சிக்க ஆரம்பித்து விட்டார்கள். படித்தவர்கள் பகட்டான பேசசுக்களிற்கப்பால் பண்பாக நடப்பார்கள் என்று பார்த்தால் பைத்தியம் முத்தியவர்கள் அவர்களாகத்தான் இருக்கின்றார்கள். மாவைக்கும் விக்னேஸ்வரனிற்கும் தற்போது என்ன வேறுபாடு?..... என்று கேட்கின்றார்கள் கூட்டமைப்பு ஆதரவாளர்களே!....

மாகாணத்திற்கென்று முன்னரை விட தற்போது விசேடமாக ஓர் கல்வியமைச்சர் இருக்கின்றார். ஆனால் இதன் பின்பு தான் வடமாகாண கல்வி நிர்வாகத்துக்குள் ஆயிரம் சீரழிவுகள் ஏற்பட்டுள்ளன என்று தமிழர் ஆசிரியர் சங்கம் விமர்சிக்கின்றது. இத்தனைக்கும் இது முன்பு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளராக செயற்பட்ட சங்கமது.

"வட மாகாணத்துக்குள் பல பாடசாலைகளிற்கு அதிபர் இல்லை, பாடரீதியாக ஆசிரியர்கள் இல்லை, வலயக்கல்விப் பணிப்பாளர் இல்லை, மாகாணக்கல்விப் பணிப்பாளர் கூட இல்லை இதுவே இன்றைய வடக்கு மாகாணம்" என தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

"குடிநீர்ப்பிரச்சினைக்கு வடமாகாண சபை என்ன செய்தது? அம்பாந்தோட்டைத் தண்ணீர்ப் பிரச்சினைக்கு 48 மணித்தியாலத்துக்குள் தீர்வு காணப்பட்டது. எமது மக்களின் பிரச்சினைக்கு வடமாகாணசபை இது வரை எந்த நடவடிக்கை மேற்கொண்டது? என இந்து மாமன்றத் தலைவர் விமர்சித்துள்ளார். "ஒரு காலத்தில் வடமாகாணசபை முதலமைச்சராக திரு.விக்னேஸ்வரன் வரவேண்டுமென்று ஆசைப்பட்டவன் நான் ஆனால் இன்று....."என சலித்துக் கொண்டார் கோண்டாவில் சிறுவர் மன விருத்திப் பாடசாலை 11வது ஆண்டு விழாவில் இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன்.

மக்கள் மக்கள் என்று தேசியம் பேசும் மாகாணசபை உறுப்பினர்கள் காணாமற்போனோர் தொடர்பாகக் கூட இதுவரை எந்த நடவடிக்கை எடுத்தார்கள்?... வளலாய் மக்களின் மீள்குடியேற்றத்தின் பின் மக்களின் அடிப்படைத்தேவைகள் தொடர்பாக என்ன நடவடிக்கைகளை எடுத்தார்கள்?....

இன்றைய தென்னிலங்கை தலைவர்களில் ஒருவர் கூறியது தான் ஞாபகத்திற்கு வருகின்றது. "தமிழ் தேசிய கூட்டமைப்பின் கையில் பயமின்றி அதிகாரங்களைக் கொடுக்கலாம் அடிபட்டு அடிபட்டே அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் திருப்பித் தருவார்கள்" என்றார். இது முற்றிலும் உண்மை என்பது தற்போது தான் சிலருக்கு தெளிவாகின்றது.

- வெண்கட்டியன்.

# தேர்தலில் மட்டுமே தோல்வி

# அரசியலில் தோற்கடிக்க முடியாது



(கொழும்பு)

தேர்தலில் தோற்கடித்தாலும், அரசியலால் என்னை தோற்கடிக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரத்தினபுரியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பிற்கு அவர் அனுப்பியுள்ள தகவலிலே அவர் இதன்னைக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை. பெயரிட வேண்டும் எனக்கோரி நடாத்தப்படும் மூன்றாவது மக்கள் சந்திப்பு ரத்தினபுரி சீவலி மைதானத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இடம் பெற்று வருகிறது.

இந்த மக்கள் சந்திப்பில் முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, மஹிந்தானந்த அலுத்கமகே, ரோஹித்த அபே குணவர்த்தன, குமார வெல்கம, டீ.பி ஏக்கநாயக்க, சாலிந்த திசாநாயக்க, எஸ்.எம் சந்ரசேன, மனுச நாணயக்கார, உதித்த லொக்கு பண்டார உள்ளிட்ட சுதந்திரக் கட்சியை சேர்ந்த 27 பேர் கலந்து கொண்டனர்.

அத்துடன், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பிரஜைகள் குழுத்தலைவர் விசாரணைக்கு அழைப்பு

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் கி.தேவராசாவை நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு இரண்டாம் மாடிக்கு விசாரணைக்கு வருமாறு நெடுங்கேணி பொலிஸார் ஊடாக பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இடம்பெற்ற விசாரணைகள் சம்பந்தமாக வாக்குமூலத்தை பதிவுசெய்வதற்காகவே தேவராசா அழைக்கப்படுகிறார் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேசிய அரசாங்கம் அல்ல இது கூட்டு அரசாங்கமே

## ஜே.வி.பி. கிண்டல்

தற்போது காணப்படுவது தேசிய அரசாங்கம் அல்ல. மாறாக கூட்டரசாங்கம் என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக தொழில்சார் சங்கத்தின் 15 ஆவது பொது சம்மேளனம் இடம்பெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால் காந்த தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது கே.டி.லால். காந்த கருத்துத்தெரிவிக்கையில் தேசிய அரசாங்கம் எனும் போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி இருக்க முடியாது ஆனால் தற்போது நாடாளுமன்றில் எதிர்க்கட்சி உள்ளது அவ்வாறானால் இது தேசிய அரசாங்கம் அல்ல இது ஒரு கூட்டரசாங்கமே என தெரிவித்துள்ளார்.

# புதிய அமைச்சர்கள் கடமைகளை பொறுப்பேற்றனர்

புதிய அமைச்சர்கள் நேற்று முன்தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

சிவில் விமான சேவைகள் அமைச்சராக நியமிக்கப்பட்ட ரெஜினோல்ட் குரே முற்பகல் செத்சிரிபாயவில் உள்ள தமது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

புதிய தொழிற்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.பீ நாவின்ன தொழிலாளர் செயலகத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதேவேளை, ஊடகத் துறை பிரதியமைச்சராக சாந்த பண்டாரவும் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர், பிரதியமைச்சர் தமது ஊழியர்களை நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுடன் சென்று சந்தித்துள்ளார்.

# விரைவில் நாடு திரும்புவேன் குற்றம் செய்தால் நிரூபிக்கலாம்

## முன்னாள் அமைச்சர் பசில் தெரிவிப்பு



தான் விரைவில் நாடு திரும்பி தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்யுமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மெதமுலன பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டுக்கு வழங்க சென்றபோது அங்கு ஒரு வகை பதற்றம் ஏற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷவின் தேசிய அடையாள அட்டையில் இருக்கு விலாசத்திற்கு நீதிமன்றம் உத்தரவை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துளளார்.

கடுவல நீதவான் வழங்கிய உத்தரவுக்கு அமைய பசில் ராஜபக்ஷவை நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அவரது கடவுச்சீட்டில் விலாசமாக குறிப்பிடப்பட்டுள்ள மெதமுலன பிரதேச வீட்டுக்கு பொலிஸார் சென்றிருந்த போது வீட்டின் கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்டிருந்தன.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவை பொலிஸார் வீட்டுக் கதவில் ஒட்ட முயற்சித்த போது, அந்த வீடு வேறு ஒருவருக்கு சொந்தமானது எனக் கூறப்பட்டதுடன் எதிர்ப்பும் வெளியிடப்பட்டது. இது குறித்து கடுவல நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# பங்குச்சந்தையில் மோசடி விசாரணை நடாத்த கோரிக்கை

கடந்த காலங்களில் பங்குச் சந்தையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் மீண்டும் விசாரணை நடாத்தப்பட வேண்டுமென இலங்கை பிணையங்கள் மற்றும் பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மூடிவைக்கப்பட்டுள்ள சில ஆவணங்கள் மீண்டும் திறக்கப்பட்டு, விசாரணை நடாத்தப்பட வேண்டுமென ஆணைக்குழுவின் தலைவர் திலக் கருணாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை பங்குச் சந்தையின் கொடுக்கல் - வாங்கல்கள் தொடர்பில் இதுவரை இடம்பெற்ற விசாரணைகளின் தரம் தொடர்பிலும் திலக் கருணாரத்ன கருத்து வெளியிட்டிருந்தார்.

மேலும் பங்குச் சந்தையின் ஒழுங்குமுறைகள் தொடர்பில் சட்ட திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுவதாகவும் இலங்கை பிணையங்கள் மற்றும் பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுத்தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எதிர்க்கட்சியாகும் வாய்ப்பு தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு இல்லை



(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அங்கு ஏற்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற பிரச்சினையானது இலங்கை ஜனநாயக கேலிக்கூத்தின் உச்சத்தில் இருப்பதை காண்பிக்கிறது என்று ஊடகவியலாளரான என். வித்தியாதரன் விமர்சித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு, ஆட்சியமைப்பதற்கான அருகதை யாருக்கு உள்ளது என்பதை உறுதிப்படுத்துமாறு கோராது, ஜனாதிபதி, குறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை அரசமைக்க அழைத்ததே காரணம் என்றும் அவர் கூறுகிறார்.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களில், அமைச்சரவையில் இணைந்துள்ளவர்கள் போக ஏனையோரை எதிர்க்கட்சியாக செயற்பட அனுமதித்தால், அது நாடாளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஒரு நிலையை ஏற்படுத்திவிடக் கூடும் என்ற அச்சமும் அவர்களை அவ்வாறு செயற்பட அனுமதிக்காமல், ஜனாதிபதி தவிர்ப்பதற்கு ஒரு காரணம் என்றும் வித்தியாதரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்ற சிறுபான்மைக் கட்சிகள் எதிர்க்கட்சியாக செயற்படுவதற்கான வாய்ப்பும் குறைவு என்றும் அவர் கூறுகிறார்.

# நற்பெயருக்கு களங்கம் நஷ்ட ஈடு கோருகிறார் ரவி



(கொழும்பு)

தனது பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் கருத்துகளைப் பரப்பியமைக்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் லங்கா பத்திரிகை நிறுவனத்திடமிருந்தும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தலா இரண்டாயிரம் மில்லியன் ரூபா நட்டஈடு கோரி கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், லங்கா பத்திரிகை நிறுவனமும் தனது பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் போலியான தகவல்களை இருவேறு சந்தர்ப்பங்களில் ஊடகங்களில் வெளிப்படுத்திய குற்றச்சாட்டிற்காகவே நிதியமைச்சர் இவ்வாறு நஷ்டஈடு கோரி சட்டத்தரணியூடாக கடிதங்களை நேற்றுமுன்தினம் அனுப்பிவைத்துள்ளார். கடந்த பெப்ரவரி 12ஆம் திகதி பிரபல ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு கோத்தாபய வழங்கியிருந்த செவ்வியில் அமைச்சர் ரவி கருணாநாயக்க அரசியலுக்கு வந்த பின்னரே வீடு வாங்கியதாகத் தெரிவித்திருந்தார். இதனைக் கடுமையாகக் கண்டித்த ரவி தனது சொத்துகளைப் பிரகடனப்படுத்தியிருந்தார். அது மட்டுமல்லாது, ஒரு மாத காலத்துக்குள் கோத்தா அவருடைய சொத்துகளைப் பிரகடனப்படுத்தாவிட்டால் அவர் தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்திருந்தார். கோத்தா இதனை செய்யத் தவறியமையினாலேயே தான் 2 ஆயிரம் மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரியுள்ளதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். அரசியலில் பழிவாங்கும் நோக்கில் தனிநபர் பெயரைக் களங்கப்படுத்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், லங்கா பத்திரிகை நிறுவனமும் மேற்கொண்ட முயற்சிகள் தவறானவை என்பதனாலேயே தான் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

(09).பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் 45ஆம்,46ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

சோம்பல் தானே நோய்களுக்கு
முதல்படி யாரும் நமக்குச்
சுற்றுபுறத் தூய்மைதானே
அடிப்படை யாகும்

45.ஒருவரிடம் காணப்பட வேண்டியது?
(1).சோம்பல் (2).தூக்கம் (3).சுறுசுறுப்பு

46.சுற்றுப்புறம் என்பது என்ன?
(1).பாடசாலை (2).வீடு (3).அயல்

(10).கீழே தரப்பட்ட விடயத்தை கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக


எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம்
மின்வெட்டு 2 மணித்தியாலங்களாக
அதிகரிக்கப்பட்டுள்ளது

47.இது ஒரு......
(1).விளம்பரம் (2).அறிவுறுத்தல்
(3).அறிவித்தல்

48.சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் வழிமுறைகளில் ஒன்று
(1).குப்பைகளை பொலித்தீன் பைகளில் இட்டு வீதியின் அருகில் போடுதல்
(2).வெறுங்காணியில் யாரும் அற்ற நேரத்தில் வீசுதல்
(3).வீட்டைச்சுற்றியுள்ள கழிவுவாய்க்கால்களை மூடி வைக்க வேண்டும்

(11).உருவைப்பார்க்க. வெற்றிடத்திற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

49.




50.ஒரு பெட்டியினுள் 7 வெள்ளை நிற மாபிள்களும், 6 பச்சை நிற மாபிள்களும், 9 நீலநிற மாபிள்களும் உள்ளன. கண்ணை மூடிக்கொண்டு ஒருவர் பெட்டியினுள் இருந்து ஒரு நீல நிற மாபிளை பெற்றுக் கொள்வதற்கு ஆகக்கூடிய எண்ணிக்கையான எத்தனை மாபிள்களை வெளியே எடுக்க வேண்டும்?
(1).9
(2).13
(3).14

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1.2  2.1  (02).3.2  4.3  5.3  6.2  (03).7.3  8.2  9.1  10.3
11.1  12.1  13.1  14.3  (05).15.2  16.1  17.3  (06).18.2
19.1  20.2  (07).21.2  22.3  23.1  24.3  25.3  26.1  27.3  28.2
29.3  (08).30.பிழை  31.சரி  32.பிழை  33.பிழை  34.சரி
(09).35.உண்மை பேசுவதில் உறுதியாக இருந்தவர் பாரதியார் ஆவார்  36.எப்போதும் எக்காலத்திலும் எந்த நிலையில் உண்மையிலிருந்து மாறக்கூடாது  37.உண்மைதான் பரம்பொருள் காட்டுகின்ற கண்ணாடியாகும்
(10).38.மெய்  39.பாட்டுக்கள்  40.திடம்  41.ஆவி  (11).42.இருள்  43.இறந்த
(12).44.உண்டு + ஆனால்  45.நல்ல + உறுதி  46.காட்டியது  47.பாரதியார்
48.ஓடி விளையாடு பாப்பா  (13).49.பல்கலைக்கழகம்  50.ஆராய்ச்சி
51.வெள்ளப்பெருக்கு  (14).52.கோர்வை  53.இடையன்
54.வெள்ளோட்டம்

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

(01).கீழே தரப்பட்டுள்ள சொற்களைக்கொண்டு கருத்து புலப்படும் வகையில் வாக்கியங்கள் எழுதுங்கள்.


01.கறை :-........................................
கரை :-........................................
02.கோலம் :-........................................
கோளம் :-........................................
03.அரம் :-........................................
அறம் :-........................................
04.அளை :-........................................
அழை :-........................................

(02).கீழே தரப்பட்ட ஆங்கில சொற்றொடருக்குரிய தமிழ்க்கருத்தினை எழுதுங்கள்

05.Thank you..................................  06.How are you? ..................................
07.very good ..................................

(03).படத்தில் உள்ள உருக்களின் பெயர்களின் சிங்களச் சொல்லை எழுதுங்கள்

08.  09.  10.  11.



.................. .................. .................. ..................

(04).பின்வரும் வினாக்களுக்குரிய சரியான சொல்லின் கீழ் கோடிடுக

12.பறக்காத பறவையாகக் கருதப்படுவது யாது?
(01).பருந்து (02).தீக்கோழி (03).ஆந்தை


13.நெற்கதிரை ஒன்று சேர்த்து வைத்து சூடடிக்குமிடம்
(01).களம் (02).புற்றரை (03).வயல்வெளி

14.வண்ணத்துப்பூச்சி முட்டையிடும் தாவரத்தின் பகுதி எது?
(01).இலையின் கீழ் (02).இலையின் மேல் (03).பழங்களின் மேல்

15.பண்டைய அரசசபையில் இசைக்கப்படும் இசைக்கருவி எது?
(01).கொம்பு
(02).தபேலா
(03).வீணை

16.தையல் ஊசி பயன்படுத்தும் போது விரலுக்கு அணியும் பாதுகாப்பு கவசம் எது?
(01).வரைச்சில்லு
(02).தீதாள்
(03).மூடி

**(05).பின்வரும் உருக்களின் பெயரை புள்ளிக்கோட்டில் எழுதுக.**


17. 

18. 


19. 

20. 


......................... ......................... ......................... .........................

21. 

22. 

23. 

......................... ......................... .........................



24. அருகில் தரப்பட்ட படத்தில் கண்ணாடிப்பாத்திரம் ஒன்றில் அரைவாசிக்கு நீர் நிரப்பப்பட்டு நூலில் கட்டப்பட்ட கறியுப்புக்கட்டி ஒன்றை தொங்க விடப்பட்டிருக்கும் அமைப்பாகும். நான்கு நாட்களின் பின் எவ்வாறான மாற்றத்தை அவதானிப்பீர்?

.........................................................................

25. விளையாட்டு விசிறி ஒன்றின் விலை ரூ 25.00 ஆகவும் விளையாட்டுக்கார் ஒன்றின் விலை விளையாட்டு விசிறியின் விலையின் மூன்று மடங்காக இருப்பின் காரினதும், விசிறியினதும் மொத்த விலை யாது?

.........................................................................

26. ஒரு பழச்சாறுப் போத்தல் 750ml கொண்டது. ஒரு போத்தல் பழச்சாற்றுக்கு அது போன்று இரு மடங்கு நீர் ஊற்றி பழச்சாறு பானம் தயாரிக்கப்பட்டால், தயாரிக்கப்பட்ட பானத்தின் மொத்த அளவை லீற்றர், மில்லிலீற்றரில் தருக?

.........................................................................

27. கடதாசி ஒன்றின் ஒரு பக்கத்தில் 240 சொற்கள் எழுதலாம். அத்தகைய 7 கடதாசிகளின் இரு பக்கத்திலும் எத்தனை சொற்கள் எழுதலாம்?

.........................................................................

28. படி ஒன்றின் உயரம் 15cm பையன்ஒருவன் அத்தகைய 20 படிகள் ஏறியதன் பின்னர் எத்தனை மீற்றர் உயரத்தில் இருப்பான்?

.........................................................................

29. 50 ரூபாய் ரிக்கற்றுக்களால் கிடைத்த பணத்தை விட எத்தனை மடங்கு அதிகமான பணம் 300 ரூபாய் ரிக்கற்றுக்களால் கிடைத்தது?

.........................................................................

30. ரமணியின் குடும்பத்திலுள்ள 5 பேர் நாடகக் காட்சிக்குச் சென்று இருவர் 50ரூபாய் பெறுமதியான ரிக்கற்றுக்களும், மூவர் 200ரூபாய் பெறுமதியான ரிக்கற்றுக்களும் வாங்கினால் அவர்கள் மொத்தமாக செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

.........................................................................

31. அவர்கள் அங்கு 1000ரூபாய் செலுத்தியிருந்தால் அவர்களுக்கு கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

.........................................................................

32. 300 ரூபாய் ரிக்கற்றுக்கள் 50ரூபாவால் விற்கப்பட்டால் அதனை வரைபில் குறித்துக்காட்டுங்கள் ?

33. அதன் பெறுமதி எவ்வளவாக இருக்கும்?

.........................................................................



**(06).கீழே ஒரு சம்பவம் தரப்பட்டுள்ளது. அச் சம்பவத்தின் மீதியை நிறைவு செய்வதற்கு பொருத்தமான ஆறு வாக்கியங்கள் எழுதுக (ஒவ்வொரு வாக்கியங்களும் நான்கு சொற்களுக்கு குறையாது, எழுவாய், பயனிலைகளுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்)**

வீதியிலே ஒரு சிறுவன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு நின்றான். அவன் அழுவதைப் பார்க்க எனக்கு விடுசெல்ல மனம் வரவில்லை......

34. .........................................................................

35. .........................................................................

36. .........................................................................

37. .........................................................................

38. .........................................................................

39. .........................................................................

**(07).40,41ஆம் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுங்கள்.**

40. பாடலில் விவரிக்கப்பட்டுள்ள பறவையைத் தெரிவு செய்க.

சோறும் எனக்குத் தேவையில்லை
சுகமும் எனக்குத் தேவையில்லை
அதிகாலையில் கூவி நிதம்
மானிடர்களை எழுப்பிடுவேன்



(1) (2) (3)


41. பாடலில் விவரிக்கப்பட்டுள்ள மிருகத்தைத் தெரிவு செய்க.

என்குரல் கேட்டால்
காடே நடுங்கும்
எனக்கு நிகர் நானே
நானே ராஜா



(1) (2) (3)

**(08).தரப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள உருக்களைப்பார்க்க. ஒவ்வோர் உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்டுள்ளன. அவை ஏதோ ஒருவகையில் தொடர்புடையன. தொடர்பினை விளங்கி சரியான விடையை தெரிவு செய்க. (உதாரணம்:A:H)**




42. மேல்வரும் கூட்டங்களுள் சரியான தொடர்பினைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.
(1). G:C, D:H, F:B
(2). C:F, B:G, D:E
(3). G:H, E:F, C:D

43. மேல்வரும் கூட்டங்களுள் சரியான தொடர்பினைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.
(1). G:C, D:H (2). A:F, B:G
(3). C:F, D:E

44. மேல்வரும் கூட்டங்களுள் மனிதனால் உருவாக்கப்பட்ட சாதனங்களின் தொகுதியைக் குறிக்கும் விடையின் கீழ்க் கோடிடுக.
(1). A,H,D,G
(2). H,C,B,E
(3). B,C,D,E

# போக்குவரத்துச் சேவை இன்மையால் துணுக்காயில் 330 குடும்பங்கள் பாதிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காயின் ஐயன்கன்குளம், பழைய முருகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களின் மக்கள் கடந்த ஐந்தாண்டுகளாக போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஐயன்கன்குளத்தில் 210 குடும்பங்களும், பழையமுருகண்டியில் 40 குடும்பங்களும், புத்துவெட்டுவானில் 80 குடும்பங்களும் தற்போது மீளக்குடியமர்ந்து ஐந்தாண்டுகளாகியும் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றனர்.

இக்கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் 15 கிலோமீற்றரிலுள்ள மல்லாவி ஆதார மருத்துவனை மற்றும் துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு செல்வதிலும் 20 கிலோமீற்றருள்ள கிளிநொச்சி பொது மருத்துவமனை மற்றும் நகரத்திற்குச் செல்வதிலும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். துணுக்காய் பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட கூட்டங்களில் போக்குவரத்து வசதிகள் உடனடியாக ஏற்படுத்தப்படும் என முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் தற்போது வரை பேருந்துப்பணிகள் எவையும் நிரந்தரமாக இடம்பெறவில்லை.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலர் சிவபாலன் குணபாலனிடம் கேட்டபோது ஐயன்கன்குளத்திற்கும் தேராங்கண்டலுக்குமிடைப்பட்ட வீதிக்கான புனரமைப்புப் பணிகள முழுமை பெறாமை காரணமாக போக்குவரத்தில் பேருந்துகள் சேவையில் ஈடுபடாதநிலை காணப்படுகின்றது.

துணுக்காயிலிருந்து பழைய முருகண்டிச் சந்திவரையான வதி முழுமையாக புனரமைக்கப்படுமானால் தனியார், அரச பேருந்து சேவைகள் இடம்பெறுவதற்கான வழிகள் ஏற்பட்டுவிடுமெனவும் தெரிவித்தார்.(160)

# மணி விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி சேதுகாவலர் வித்தியாசாலையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்ற திருமதி.இராசேஸ்வரி திருஞானசிவத்தின் மணிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

விழா நாயகி மங்கள வாத்தியத்துடன் கைதடி கிராமத்தவர்களால் ஊர்வலமாக அழைத்து வரப்படவுள்ளார்.

கைதடி மாவடிக்கந்தன் ஆலய மண்டபத்தில் கைதடி சேதுகாவலர் வித்தியாசாலை அதிபர் திருமதி. சியாமளா கணராஜன் தலைமையில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை பாடசாலையின் ஆசிரியை திருமதி சோதீஸ்வரி நாகராஜாவும், ஆசியுரையை சிவசிறி யோ.குருசாமிக் குருக்களும் நிகழ்த்த உள்ளனர்.

மணி விழா மலர் வெளியீட்டை தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.க.சிறிதரன் நிகழ்த்த உள்ளார்.

ஏற்புரையை மணிவிழா நாயகி திருமதி.இராசேஸ்வரி திருஞானசிவம் வழங்க உள்ளார்.

நன்றியுரையை மணிவிழா குழு செயலாளர் சு.சுதர்சன் வழங்க உள்ளார். (90)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய அரசாங்கமும் அதன் எதிர்காலமும் எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் யாழ்.சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் நாளை இடம்பெறவுள்ளது.

யாழ்.நகரிலுள்ள டி.சி.எம். கல்வி நிலையத்தில் பிற்பகல் 4 மணிக்கு சொ.சிவபாலன் தலைமையில் இடம்பெறுகின்றது.

இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# சிறுவர் நாடக தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் உலக நாடக தின விழாவை முன்னிட்டு சிறுவர் நாடக தின விழா இன்று இடம்பெறவுள்ளது.

பீடாதிபதி எஸ்.அமர்தலிங்கம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தல் காலை 9 மணிக்கு விழா இடம்பெறவுள்ளது.

யாழ்.சமூக செயற்பாட்டுமையப் பணிப்பாளர் ந.சுகிர்தராஜ் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினராக திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.ஜோன்சன் ராஜ்குமார் கலந்துகொள்கிறார்.

இதன்போது இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு இடையிலான சிறுவர் நாடகப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

# பூநகரியை ஆக்கிரமிக்கும் உவர்; தடுப்பணையை அமைக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

பூநகரியில் பெருமளவு நிலப்பரப்பு உவரடைந்து வருவதன் காரணமாக பெருமளவு மரங்கள் அழிவடைந்து வருகின்றன.

நல்லூர், ஆலங்கேணி, வாடியடி, பரமன்கிராய் ஆகிய பகுதிகளில் பெருமளவு நிலப்பரப்பு உவரடைந்துள்ளன. நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நல்லூரிலிருந்து பரமன்கிராய் வரையான பூநகரி வடக்குப் பகுதியில் உவர் தடுப்பணை அமைக்கப்பட்டுள்ள போதிலும் இது முழுமை பெறாததன் காரணமாக பூநகரி உவரடையும் அபாயம் காணப்படுகின்றது.

பூநகரி மேற்கின் பல்லவராயன்கட்டுக்கிராமம் முழுமையாக உவரடைந்துள்ளது. கிராஞ்சி, வேரவில், கரியாலைநாகபடுவான் போன்ற கிராமங்கள் தற்போது உவராபத்தினை எதிர்கொண்டுள்ளது. பூநகரி மேற்குப் பகுதிக்கு யு.என்.டி.பி நிறுவன உதவியுடன் உவர் தடுப்பணை அமைப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஆனாலும் பூநகரியின் உவரடைந்துள்ள பகுதிகளில் பெருமளவு மரங்கள் அழிவடைந்துவருவதை தற்போது காணக்கூடியதாகவுள்ளது. பூநகரி மேற்கு வடக்குப் பகுதிகளில் உவர் தடுப்பணைகளை பலமாக அமைப்பதுடன் நன்னீர் நீர்நிலைகளை வேகமாக உருவாக்குவதன் மூலம் பூநகரி முழுமையாக உவரடையாமல் காப்பதுடன் மரங்களையும் பாதுகாக்கமுடியுமென்பது குறிப்பிடத்தக்கது. (160)

# வீதிச் சிலுவைப் பாதை

கொழும்புத்துறை சிறிய குருமடத்திலிருந்து ஆரம்பமாகும் தவக்கால வீதிச் சிலுவைப்பாதை நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள திருவுளப் பணியாளர் சிறிய குருமடத்தில் இருந்து ஆரம்பமாகும் இச்சிலுவைப்பாதைப் பேரணி ஆனந்தன் வடலி வீதி சென்.மேரிஸ் முதலாம் ஒழுங்கை சென்.மேரிஸ் 2 ஆம் ஒழுங்கை வழியாக புனித செபமாலை அன்னை ஆலயத்தைச் சென்றடையவுள்ளது. (சி)

# கல்வயல் ஆயிலடியில் புத்தாண்டு விழா

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய இளைஞர் குழுவின் ஒருங்கிணைப்பில் புத்தாண்டு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர் சி.இளந்திரையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் க.கந்தசாமி பிரதம விருந்தினராக யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி க.கிருபசக்தி ஆகியோர் கௌரவ விருந்தினராக சிறப்பிக்கவுள்ளனர்.

வரவேற்புரையினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் ச.அகிலன் வழங்குவார் இந்நிகழ்வில் வி.ஜானுசா, ம.வீணா ஆகியோரின் நடனமும் இடம்பெறும். நன்றியுரையினை யோ.முகுந்தன் ஆற்றுவார்.

இப்புத்தாண்டு விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஆலய தர்மகர்த்தாவும் எற்பாட்டாளர்களும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# துறையூர் ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவம்

வேலணை துறையூர் ஹரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மகோற்சவத்தின் 5 ஆம் நாளான நாளை இரவு 9.30 மணிக்கு தீ மிதிப்பும், 7 ஆம் நாளான செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணிக்கு திருவேட்டையும், 8 ஆம் நாளான புதன் கிழமை இரவு 8.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 9 ஆம் நாளான வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு தேர்த்திரு விழாவும் 10 ஆம் நாளான வெள்ளிக் கிழமை சமுத்திரத்தீர்த்தமும் இடம் பெறும்

உற்சவ காலங்களில் காலை 8.30 மணிக்கு அபிஷேகமும் முற்பகல் 11.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் மாலை 5.30 மணிக்கு சாயரட்சை பூசையும் மாலை 6 மணிக்கு கொடி மர பூசையும் இரவு 8 மணிக்கு வந்த மண்டப பூசையும் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (21)

## முரசின் இன்றைய பலன்

(28.03.2015 சனிக்கிழமை)

ஐய வருஷம் பங்குனி மாதம் 14 ஆம் திகதி.
அட்டமி திதி / சித்தம்-யோகம்
திருவாதிரை நட்சத்திரம் மு.ப. 08.23 வரை. பின் புனர்பூசம்
இராகு காலம 09.14 - 10.44 வரை. சுபநேரம 03.14 -04.44 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — பட்டகடனை மீளப்பெற முடியாத நிலையில் முறையீடு செய்தல்

**ரிஷபம்** — வாகனயோகங் கிட்ட உதவி செய்ய சகோதரனுக்கு நன்றி கூறுதல்

**மிதுனம்** — மங்கள நிகழ்வு நடாத்த மண்டபம் தேழ அலைதல்

**கடகம்** — நோய் அகன்றுவிட தெய்வ தலங்களுக்கு விஜயஞ் செய்தல்

**சிங்கம்** — வெளியீடுகளில் புதிய படைப்புக்களில் ஆர்வம் காட்டுதல்

**கன்னி** — பதவி உயர்வும், சம்பள ஏற்றமும் ஏற்பட்டு ஆனந்தம் தக்கவைத்தல்

**துலாம்** — பாதுகாப்பின் கவனக்குறைவினால் வாகனம் திருட்டுப் போகும் நிலைப்பாடும்

**விருச்சிகம்** — மனையாளின் தேகநலப் பாதிப்பை எண்ணி மனக் கவலை வாட்டுதல்

**தனுசு** — கவனக்குறைவினால் திகதி தப்பிய வில்லைகள் பெற்றுவிடல்

**மகரம்** — விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமையினால் எச்சரிக்கை செய்யப்படல்

**கும்பம்** — வாக்குகவாதத்தினால் கடன் பெறச்சென்ற விடத்தில் சச்சரவேற்படல்

**மீனம்** — பிள்ளைகளின் நடத்தைப் போக்கில் சந்தேகம் ஏற்பட்டு உளத்தாக்கம் அடைதல்

# போரை முடிவுக்குக்கொண்டுவர அமெரிக்காவுடன் பேசத் தயார்

## சிரிய அதிபர் அறிவிப்பு



உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்காவுடன் பேச்சு நடாத்ததயார் என சிரியா அதிபர் பஷிர் அல் - ஆசாத் அறிவித்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டு போரினால் பல லட்சம் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அமெரிக்காவின் தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த ஆசாத், "அமெரிக்கவுடன் பேச்சு நடாத்த தயாராகவுள்ளேன். தற்போது உள்ள சூழ்நிலையில் பேச்சு வார்த்தை நடத்துவது என்பது சிரியாவுக்கு நல்ல விளைவுகளையே ஏற்படுத்தும். ஆனால் எங்களை மரியாதையுடன் நடத்த வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்காவிற்கும் எங்களுக்கும் நேரடியான தகவல் தொடர்பு இல்லை என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக கடந்த மார்ச் 15 இல் அமெரிக்காவின் வெளிவிவகாரத் துறை மந்திரி ஜான் கெர்ரியும் இதே கருத்தை தெரிவித்து இருந்தார்.

ஆனால் சிரியாவில் நடைபெறும் போருக்கு முக்கிய காரணமே ஆசாத் தான். எனவே அவருடன் பேச்சு நடத்தக்கூடாது என கிளர்ச்சிப் படை எதிர்ப்பு தெரிவித்திருந்தது. இது பற்றி கருத்து தெரிவித்துள்ள அமெரிக்காவின் உயர் அதிகாரி ஒருவர் ஆசாத்தின் பிரதிநிதிகளுடன் நாங்கள் பேச்சு நடத்த தயாராக உள்ளோம் அவருடன் நேரடியாக பேச்சு நடத்து திட்டம் இல்லை என தெரிவித்துள்ளார்.

சிரியாவில் நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டுவர பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும் என அமெரிக்கா நீண்ட நாட்களாகவே கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# தாய்லாந்தில் ரயில் விபத்து 52 பேர் படுகாயம்



தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இருந்து டென் சாய் நகருக்கு எக்ஸ்பிரஸ் ரயில் ஒன்று சென்று கொண்டிருந்தது. இரவு 10.15 மணியளவில் அயுத்தயா மாகாணத்தில் சென்ற போது நின்று கொண்டிருந்த மற்றொரு எக்ஸ்பிரஸ் ரயில் மீது பயங்கரமாக மோதியது.

இதனால் பாங்காக்டென்காய் ரயிலின் 6 பெட்டிகள் தடம் புரண்டு கவிழ்ந்தன. தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்தனர்.

இந்த விபத்தில் ரயிலில் பயணம் செய்த 52 பேர் காயம் அடைந்தனர். 6 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் 2 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. காயமடைந்தவர்களில் 2 பேர் வெளிநாட்டினர். அமெரிக்கா மற்றும் தென கொரியாவைச் சேர்ந்த அவர்கள் ஆஸ்பத்திரியில் தங்கியுள்ளனர்.

# ஏமனுக்கு ஆதரவாக சவுதி வான் தாக்குதல்



ஏமனின் உள்நாட்டு மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், ஏமனுக்கு ஆதரவாக சவுதிஅரேபியா வான்தாக்கு தலை ஆரம்பித்துள்ளது.

ஏமன் ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் சவுதிஅரேபியா இவ்வாறு வான் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அரேபிய தீபகற்பத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள

ஏமன் நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் கடந்த செப்டம்பர் மாதம் முதல் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்களும், ஷயா பிரிவைச் சேர்ந்தவர்களும் கிளிர்ச்சியில் ஈடுபட்டு வரும் நிலையில், அவர்களுக்கு ஈரான் ஆதரவளித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# சிலியில் திடீர் வெள்ளம் மீட்புப் பணிகள் ஆரம்பம்

உலகிலேயே வறண்ட பிரதேசமாக கருதப்படும் சிலியின் அட்காமா பாலைவனத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக 2 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 24 பேர் காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாரிய கடும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளம், பள்ளத்தாக்கையும் அதன் கீழுள்ள நகரத்தையும் தாக்கியுள்ளது.

இதன்காரணமாக, ஆயிரக் கணக்கான மக்கள் மின்சாரம் மற்றும் குடிநீர் அற்ற நிலையில் பெரும் சிரமத்திற்கு முகங் கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொப்பியாபோ நகரத்தில் உள்ள ஆற்றின் கரைகள் உடைபெடுத்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.



தொடர்சியாக மேலும் கடும் மழை பெய்வதுடன் சேற்று குழாம் அதிகரிக்கலாம் என்ற அச்சம் காரணமாக தற்போது துரித கதியிலான மீட்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உலங்கு வானூர்திகள் மூலம் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில், ஜனாதிபதி மிச்சலி பெச்சிலட் தமது உத்தியோக பூர்வ நிகழ்வுகளை ரத்து செய்த நிலையில் பாதிக்கப்பட்ட கொப்பியாபோ நோக்கி செல்லவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# விமான ஓட்டியின் அறையில் இரு குழுவினர் இருக்கவேண்டும்

## கனேடிய போக்குவரத்து அமைச்சர் உத்தரவு

சகல கனேடிய விமானநிறுவனங்களும் விமான ஓட்டியின் அறையில் எல்லா நேரங்களிலும் இரு குழு அங்கத்தவர்களை வைத்திருக்க வேண்டும் என்பது உடனடியாக நடைமுறைக்கு வர வேண்டும் என போக்குவரத்து அமைச்சர் லிசா றெயிட் நேற்று முன்தினம் பிற்பகல் ஒட்டாவாவில் அறிவித்துள்ளார்.

தற்சமயம் கபினில் இரண்டு அங் கததவர்கள் இருக்கவேண்டும் என்ற தேவை இருந்ததில்லை. இந்த உத்தரவின் பின்னர் இருவர் இருப்பது தேவை எனவும் தெரிவித்துள்ளார்.

இது ஒரு விமான உதவியாளராகவோ ஒரு வாடிக்கையாளர் சேவை நபராகவோ இருக்கலாம்.

ஆனால் அவர்கள் விமான பணியாளர் குழுவை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் எனவும் அமைச்சர் கூறினார். Air Canada, Air Transat இரண்டும் தாங்கள் தாமாகவே முன்வந்து




புதிய விமானதள நெறிமுறையான இரண்டு குழு அங்கத்தவர்கள் கொக்பிற்றில் இருக்க வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்துள்ளன.

உலகம் பூராகவும் விமான நிறுவனங்கள் நேரத்தை வீணாக்காது ஒவ்வொரு விமானத்திலும் இரு குழு அங்கத்தவர்கள் விமான ஓட்டியின் அறையில் இருக்க வேண்டும் என விதிகளை மாற்றுகின்றனர்.

விமானத்தை ஓட்டிய நபரே விமானத்திற்கு அச்சுறுத்தலாக இருந்ததால் நடந்தது என்ன என்பது அனைவரும் அறிந்த விடயம்.

ஜேர்மன்விங்ஸின் விபத்தின் ஆரம்ப அறிக்கைகளை தொடர்ந்து தாமதமின்றி இந்த கொள்கைளை செயற்படுத்தியதாக Air Canada அறிவித்துள்ளன.

# வடகொரியா கைது செய்த இருவரையும் விடுவிக்க வேண்டும்

## தென்கொரியா கோரிக்கை

தென் கொரியாவை சேர்ந்த கிம் குக்-கி மற்றும் சோ சுன்-கில் ஆகியோர் தங்கள் நாட்டில் உளவு பார்த்ததாக கூறி கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டதாக வட கொரியா நேற்று முன்தினம் அதிகாரப் பூர்வமாக அறிவித்தது. அவர்கள் இருவரின் புகைப்படங்களையும் வட கொரியா வெளியிட்டது.

அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் முதன்மை உளவு நிறுவனத்தின் உத்தரவுப்படி, இவர்கள் இருவரும் தங்கள் அதிபர் பற்றிய தகவல்களையும், நாட்டின் இரகசிய தகவல்களையும் சேகரித்து வந்ததாக வட கொரியா குற்றம் சாட்டியது. இக்குற்றச்சாட்டை இருவரும் ஒப்புக்கொண்டதாக வட கொரிய தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்று காலை செய்தியாளர்களை சந்தித்த தென் கொரிய செய்தி தொடர்பாளர் லிம் பியாங் சியோல், கிம் மற்றும் சோ



ஆகிய இருவரும் தங்கள் நாட்டை சேர்ந்தவர்கள்தான் என உறுதிப்படுத்தினார்.

ஆனால் இருவரும் வேவு பார்த்தனர் என்ற வட கொரியாவின் குற்றச்சாட்டை, அவர் மறுத்தார்.

எனவே வட கொரியா உடனடியாக இருவரையும் விடுவித்து, தாமத மின்றி தங்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்ப வேண்டும் என வலியுறுத்தினார். வட கொரியாவின் குற்றச் சாட்டை தென் கொரிய தேசிய உளவு நிறுவனமும் மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குடிநீரில்...

மயிலங்காட்டு மக்கள் உட்பட சகலரும் நன்கறிந்த விடயம்.

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய மாணவர்களது குடிதண்ணீரில் நஞ்சு கலக்கப்பட்ட கொடிய செயலுக்கு தார்மீகப் பொறுப்பு கூற வேண்டிய கடப்பாடு மாகாண சபைக்கும், பிரதேசசபைக்கும்தான் உண்டு என்பது சகலரும் ஏற்றுக்கொண்ட உண்மை.

இந்நிலையில், உண்மையான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த ஒத்துழைப்பதற்கு மாறாக அதற்கான பழியை இன்னொருவர் மீது சுமத்த முயற்சிப்பதன் பின்னணி என்ன என்பது ஆழமான சந்தேகங்களை ஏழாலைமக்களின் மனங்களில் ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயத்திற்கு கட்டடங்களை அமைத்துக் கொடுத்து அப்பாடசாலையை தரம் 11 வரை தரமுயர்த்தியது ஈ.பி.டி.பி.தான் என்பதையும், மயிலங்காட்டு பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை இயன்ற வரை ஏற்படுத்தி கொடுத்து வருவது ஈ.பி.டி.பி.தான் என்பதையும் மயிலங்காட்டு மக்கள் நன்கறிவர்.

இந்நிலையில் ஏழாலை மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் கல்விகற்கும் எமது வருங்கால சின்னஞ்சிறு பூக்களின் உயிருக்கு ஆப்புவைக்க முயன்று, அரக்கத்தனமான அந்த கொடிய செயலை தமதுபதவி நாற்காலிகளுக்காக பயன்படுத்த முயலும் மிகமோசமான செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதிசீவரத்தினம், உண்மையான குற்றவாளிகளை பொலிஸார் விரைவாக கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## பெண்கள்...

எல்லை தாண்டி வருவதனால் உள்ளூர் மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் என்பன குறித்து இந்த நிகழ்வில் ஆராயப்பட்டிருக்கின்றது.

ஆயினும், பெண்களைத் தலைமையாகக் கொண்டுள்ள குடும்பங்களின் நலன்களுக்கான தலைமையகம் ஒன்றை நிறுவுவது தவிர ஏனைய பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான பதிலேதும் பிரதமரினால் வழங்கப்படவில்லை என்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராகிய சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

வடமாகாணத்தில் உள்ள பெண்களைத் தலைமையாகக் கொண்டுள்ள குடும்பங்களின் தலைமையகத்தை, யாழ்ப்பாணத்தில் நிறுவுவதிலும் பார்க்க, அந்த மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கும் பொதுவாக கிளிநொச்சியில் நிறுவ வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருப்பதாகவும் அதனை பிரதமர் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அதன் பின்னர் யாழ் அரச செயலகத்தில் நடைபெற்ற பலவேறு தரப்பினருடனான சந்திப்பிலும் கலந்து கொண்டார்.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய டக்ளஸ் தேவானந்தா, இரகசிய முகாம்களில் பலர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருப்பதைச் சுட்டிக்காட்டி, அது குறித்து பிரதமரிடம் கேள்வி எழுப்பியபோது, அவ்வாறான இரகசிய முகாம்கள் தமது ஆட்சிக்காலத்தில் கிடையாது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதிலளித்தார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் மற்றும் தென்னிந்திய திருச்சபையின் ஆயர் டானியல் கனகராஜா ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

## இரகசிய...

னர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாவது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் காணிகளை இராணுவத்தினர் பொருளாதார வலயமாக பயன்படுத்துகின்றனர்.

வலிகாமம் வடக்கிலுள்ள ஆயிரத்து 100 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டு அதில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், குறித்த ஒரு பிரிவில் மாத்திரம் மீளக்குடியமர மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்களை முழுமையாக மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். பலாலி, மயிலிட்டி பகுதி மீனவர்களின் மீள்குடியேற்றமும் மேற்கொள்ளப்பட வேண்டும். இராணுவத்திடம் கோரினால் 1 கிலோமீற்றர், 2 கிலோமீற்றர் தூரம் பாதுகாப்பு வேலியை பின்நகர்த்துகின்றோம் என்று கூறுகின்றனர்.

எமக்கு இராணுவத் தீர்வு தேவையில்லை. அரசியல் தீர்வுதான் தேவை. இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விடுதி, பண்ணை நடத்துவதுடன் விவசாயம் செய்கின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயம் என்பது பொருளாதார வலயமாக பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மக்களுக்குரிய காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தடுத்து வைக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கையில் இரகசிய முகாம் இல்லை என்று கூறப்படுகின்றது. இந்த இரகசிய முகாம்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதன்மூலம் கடத்தப்பட்டோர், காணாமற் போனோர் தொடர்பில் பல விடயங்கள் வெளிப்படும் என்று சுரேஷ் எம்.பி. கூறினார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க,

உயர்பாதுகாப்பு வலயத்தை பொருளாதார வலயமாக பயன்படுத்தப்படுவது தொடர்பாக இன்று இராணுவ அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது கதைப்பேன். இலங்கையில் இரகசிய முகாம்கள் இல்லை. அவ்வாறு இருப்பதாக நான் அறியவில்லை. இது தொடர்பாக நாம் தொடர்ந்தும் கலந்துரையாட வேண்டும் என்றார்.

## மகிந்தவின்...

பிரித்தானிய புலனாய்வு அமைப்பான எம்.16 அல்லது அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ.யின் விளை வாக இலங்கையில் புதிய அரசாங்கம் உருவாகவில்லை. இலங்கை மக்களே அமைதியான முறையில் ஜனநாயக ரீதியாக புதிய அரசாங்கத்தைத் தெரிவு செய்து ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான உறவுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அத்தியாவசிய...

செயலாளராக இருக்கும் பஸ்நாயக்கா இக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்). இதேபோல் வடமாகாண சபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவும் தனது அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. இரண்டு அறிக்கைகளும் வெளிப்படுத்தப்பட்டு சரியானமுறையில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படுதல் வேண்டும். இவ்விடயம் தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் வாய் மூல வினா எழுப்பியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

• இரணைமடு நீர்விநியோகத் திட்டத்துடன் இணைந்த யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட கழிவுநீர்வாய்க்கால் அனுமதிக்கப்பட்ட திட்டத்தை விரைவாக செயற்படுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

• எமது கடல் வளத்தை அழித்தும், சுரண்டியும் எமது கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரத்தை சீரழிக்கின்ற, தடைசெய்யப்பட்டதும் எல்லை தாண்டியதுமான மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதோடு, எமது கடற்றொழிலைப் புனரமைப்புச் செய்து, நவீனமயப்படுத்தி எமது கடற்றொழிலாளர்களது வாழ்வை மேம்படுத்தல் வேண்டும். அத்துடன் வடமாகாணத்தில் மீனவர் நலன்சார்ந்த சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு வழிவகைசெய்தல் வேண்டும். இவ் விடயம் தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் வினா எழுப்பவுள்ளேன்.

• வடமாகாணத்தில் இரகசிய தடுப்பு முகாம்கள் காணப்பட்டால் அவை வெளிப்படுத்தப்பட்டு அதிலே தடுத்து வைக்கப்பட்டவர்கள் விபரங்கள் தெரியப்படுத்தப்படவேண்டும். இவ் விடயம் தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் வாய் மூல வினா எழுப்பியுள்ளதையும் நினைவுபடுத்துகின்றேன்.

• நீண்டகாலமாகவும் விசாரணைகள் இன்றியும், குற்றங்கள் நிரூபிக்கப்படாமலும், புனர்வாழ்வு வழங்கப்பட்டும் சிறைகளில் வாடும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலைசெய்தல் வேண்டும்.

• வடக்கு நோக்கிப் பயணம் செய்யும் மக்களுக்கு அசௌ கரியத்தை ஏற்படுத்தும் ஓமந்தைச் சோதனைச் சாவடியை முற்றாக அகற்றல் வேண்டும்.

• மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்பதே எமது நிலைப்பாடாகும். பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான அனைத்து நிலமும் உரியவர்களிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும்.

• யுத்தத்திற்குப் பின்னர் சொந்தவாழ்விடம் திரும்பிய மக்களினதும், மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களினதும் வாழ்வாதாரத்தைமேலும் மேம்படுத்த உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

• 25/2014. 25/2014 (01) ஆகிய சுற்றறிக்கைகளின்படி தற்காலிக, அமைய (நாளாந்த), பதில் கடமை ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வடமாகாணசபையின் கீழுள்ள திணைக்களங்களில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கும், தேசிய பாடசாலைகளில் பணியாற்றும் கனிஷ்டதர ஊழியர்களுக்கும், இலங்கை போக்குவரத்துசபையில் வடமாகாண சாலைகளில் கடமையாற்றுகின்ற ஊழியர்களுக்கும், யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கடமையாற்றுகின்ற ஊழியர்களுக்கும், யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற ஒருதொகுதி சுகாதாரத் தொண்டர்களுக்கும் 2015 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கமைவாக நிரந்தர பதவியினை காலக்கிரமத்தில் வழங்குதல் வேண்டும்.

• முன்னாள் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் உட்பட ஏனைய அமைப்புக்களின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் அவர்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

• யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்ற நலன்புரி நிலையங்களுடைய தேவைகள் யாவும் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

• யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், குப்பைகள் தேங்கி காணப்படுகின்றன. இவற்றினை நாளாந்தம் அகற்றுவதற்குரிய பொறிமுறை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

• யாழ். மாநகரசபை கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை உடனடியாக விடுவித்து கட்டடத்தின் பூர்வாங்க வேலைகளை தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

• தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான வழியில் செல்வதற்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து, அதற்கு மேலதிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விசேட அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

• யுத்தசூழலால் பாதிக்கப்பட்டு, பொருளாதாரத்தில் நலிந்து போன மக்களை தூக்கிநிமிர்த்த உதவியிருக்கும் சமுர்த்திக் கொடுப்பனவை மேலும் அதிகரிப்பதுடன் சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கையையும் அதிகரித்தல் வேண்டும்.

• யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் வேலையற்று இருக்கும் எமது இளைஞர், யுவதிகளுக்கு தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்தல்: சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு தொழில் வாய்ப்புக்களை மேலும் ஏற்படுத்துதல். சொந்தப் பொருளாதார வளர்ச்சியில் எமதுமக்கள் வாழுவதற்கான சூழலை ஏற்படுத்தல் வேண்டும்.

• விவசாய, உள்ளூர் உற்பத்திகள் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றை ஊக்குவித்து, ஒவ்வொருவரும் சுய பொருளாதார வளர்ச்சியடைய நிதிவளம், உள்ளீடுகள் மற்றும் மூலப்பொருட்களை வழங்குதல் வேண்டும்.

• பலாலி விமானநிலையத்தை சர்வதேசதரத்திற்கு உயர்த்தி கட்டியெழுப்பப்படவேண்டும்.

• தொழில் இழந்தவர்களுக்கும் பரம்பரைத் தொழில்களை இழந்தவர்களுக்கும் நட்டஈடுகளும் நிவாரணங்களும் வழங்கப்படவேண்டும்.

• யாழ். ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் குடிநீர் தாங்கியில் நச்சுதிராவகம் கலந்தமைதொடர்பில் வெளிப்படையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

• வடமாகாணக்கல்வித் திணைக்களத்தின் கீழே இயங்குகின்ற வன்னிப்பகுதி பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையினை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

• யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேரவையினுடைய செயற்பாடு இல்லாத காரணத்தினால் பல்கலைக்கழகத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. பேரவையினை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

• அரசகாணிகளில் குடியிருக்கும் மக்களில் சிலருக்குரிய காணி உறுதிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல் ஏனைய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரிவுகளிலும் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு காணிஉறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/433 கட்டைக்காடு கிழக்குப்பகுதியை சேர்ந்த அரசகாணியில் குடியிருப்பவர்களுடைய காணிப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

• அண்மையில் யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்திய அரசினால் வழங்கப்படும் வீட்டுத்திட்டம் கிடைப்பதற்கு ஆவனசெய்யப்படுதல் வேண்டும். அதேவேளை அந்தப் பிரதேசத்திற்குரிய போக்குவரத்து, மின்னிணைப்பு, சுகாதாரம், குடிநீர்வசதிகளை உடனடியாக மேற்கொள்ளல் வேண்டும். விசேடமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட அனைவருக்கும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் இலவசமாக மின்னிணைப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்.

• யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீதிகளையும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான வீதிகளையும் திருத்துவதற்கு உடனடியாக பணிப்புரை வழங்கவேண்டும்.

• வடமாகாணசபையின் கீழுள்ள திணைக்களங்களில் காணப்படுகின்ற சுமார் 400 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும்.

• வடமாகாணசபையின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களில் காணப்படுகின்றசுமார் 100 இற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும்.


• வடமாகாணசபையின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களில் களப் பணிபுரிகின்ற அலுவலர்கள் மோட்டார் சைக்கிள்களை பெறுவதற்காக ஏற்கனவே விண்ணப்பித்து இருந்தார்கள். அவர்களுக்குரிய மோட்டார் சைக்கிள்கள் காலக்கிரமத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

• வடமாகாணத்தில் வெற்றிடமாக உள்ள தேசிய பாட்சாலை அதிபர் வெற்றிடங்கள் யாவும் வெளிப்படையாக விளம்பரம் கோரப்பட்டு நிரப்பப்படுதல் வேண்டும்.

# கைதிகள் விடுதலை தாமதம் வேண்டாம்

## ரணிலிடம் சந்திரகுமார் எம்.பி. கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

இது வரைக்கும் எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினரால் மக்களின் மேலும் பல பிரச்சினைகள் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது

சுமார் 196 பேர் இதுவரைக்கும் எவ்வித குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்படாமல் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவே இவர்கள் தாமதமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

இந்திய மற்றும் தென்னிலங்கை றோலர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கடற்றொழிலர்களின் வாழ்வாதாரம் மேலும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

எனவே இது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வடக்கு கடற்றொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை மனிதாபிமான முறையில் தொழிலாளிகள் என்ற வகையில் விடுதலை செய்தாலும் அவர்களின் றோலர்கள் விடுவிக்கப்படக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் தெரிவித்த போது பதிலளித்த பிரதமர் தற்போது கைப்பற்றப்படும் றோலர்கள் விடுவிக்கப்படுவதில்லை என்றார்.

சுண்டிக்குளம் பிரதேசத்தில் 85 வரையான கடற்றொழில் செய்யும் குடும்பங்கள் இது வரைக்கும் மீள் குடியேற்றப்படவில்லை காரணம் கண்ணி வெடி என இராணுவம் கூறுகிறது. ஆனால் அந்தப் பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்து கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வருகின்றனர். எனவே இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வலி.வடக்கில் இராணுவத்தினரால் சுற்றுலா விடுதிகள், கோல்ப் மைதானம் என அமைக்கப்பட்டு வருகிறது இதற்கும் தேசிய பாதுகாப்புக்கும் தொடர்பில்லை எனவே அந்த பிரதேசங்களிலும் விரைவான மீள்குடியேற்றத்திற்கு வழிவகுக்க வேண்டும்.

அத்தோடு பிரதமர் அவர்களினால் கிளிநொச்சியில் இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள காணிகள் அரச காணிகள் எனக் கூறப்பட்டது ஆனால் அங்கு அப்படியல்ல பரவிபாஞ்சான், இயக்கச்சி, கிருஸ்ணபுரம் போன்ற பிரதேசங்களில் இராணுவத்தினர் தனியார் காணிகளிலே உள்ளனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரால் சுட்டிக் காட்டப்பட்டது.

# பெண்களுக்கு எதிரான வன்முறை; தடுத்து நிறுத்த நடவடிக்கை

## அமைச்சர் ரோசி சேனநாயக்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக தாம் செயற்படுவதற்கு தயாராக இருப்பதாக மகளிர் விவகார அமைச்சர் ரோசி சேனநாயக்க நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

நிறைகுறைந்த சிசுப்பிறப்பினை இலங்கையில் இருந்து ஒழிப்போம் எனும் தொனிப் பொருளில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்குணவு வழங்கும் திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இலங்கையில், பிறக்கும் பிள்ளைகளில் 3 பிள்ளைகளை எடுத்துக் கொண்டால், ஒரு பிள்ளை போசாக்கின்மையாக பிறக்கின்றது. யாழ்.மாவட்டத்தில் கல்வி மற்றும் போசாக்கு வழங்க வேண்டுமென்ற சிந்தனை இருந்தது. அதனடிப்படையில், இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திறைசேரியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கர்ப்பமாகி 3 மாதத்தின் பின்னர் 4 மாதங்கள் இருந்து குழந்தை பிறக்கும் வரைக்கும் குறித்த பணம் 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும். பொதுச் சுகாதார பரிசோதர்கள் பரிசோதனை செய்த பின்னர் தரமானதாக வழங்கப்படும்.

இந்த போசனைக் கூறுகளை வழங்குவதற்கு முலகாரணமாக மகளீர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் பெரும் அணுசரணையாக இருந்தவர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள், மற்றும் விதவைப் பெண்களின் பிரச்சினைகள் மற்றும் குடும்ப வன்முறைகளுக்கு எதிராக பாதிக்கப்பட்ட அனைத்து பெண்களுக்கு உதவி செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (25)

# ஓசோன் மண்டலத்தில் ஓட்டை; மன்னாரில் அறிவூட்டும் செயலமர்வு

ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பினால் சூழலில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ஸ்டான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஓசோன் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது. ஓசோன் மண்டலத்தில் ஏற்படும் பாதிப்புகள், அவற்றை கட்டுபடுத்துவதற்கான வழிவகைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக சுற்றாடல் அமைச்சின் புதுபித்தல் சக்தி தேசிய ஓசோன் பிரிவின் பணிப்பாளர் ஜனக குணவர்த்தன விளக்கமளித்தார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் மக்கள் மத்தியில் குறித்த அறிவூட்டலை எடுத்து செல்லும் நோக்கோடு பாடசாலைகளின் ஆசிரியர்கள், அரச திணைக்களங்களின் அதிகாரிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், வனவள அதிகாரிகள் ஆகியோருக்கு இந்த செயலமர்வு நடத்தப்பட்டது.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தோற்பொருள் உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் டி.எஸ்.ஐ றேடிங் கம்பனி ஆகியன இணைந்து பாதணி, தோற்பை, சீற்கவர், போன்ற தோற்பொருள் உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழில் நிறுவனங்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் விருத்தி விழிப்புணர்வுக் கருத்தரங்கு அடுத்தமாதம் 6 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்து பயன்பெற விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# வவுனியாவில் பணிப்பகிஸ்கரிப்பு

(வவுனியா)

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா மாவட்ட ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சம்பள உயர்வு வழங்கக் கோரி நேற்றுக் காலை முதல் மதியம் வரை இந்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# கர்ப்பிணிகளுக்கு போசனைப் பொதிகள்



(யாழ்ப்பாணம்)

'நிறை குறைந்த சிசுபிறப்பினை இலங்கையில் இருந்து முற்றாக ஒழிப்போம்' எனும் தொனிப்பொருளில் 'உத்தம வழிபாடு' எனும் போசாக்கு உணவு வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது,

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றம் மகளிர் விவகார அமைச்சர் ரோசி சேனநாயக்க ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், மகளீர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் மாவை சேனாதிராஜா மற்றும் சரவணபவன் உட்பட வடமாகாண சபை உறுப்பினர் சின்னத்துரை தவராசா மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (25)

# வவுனியா தமிழ் மகாவித்தியாலய பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(வவுனியா)

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தின் தற்போதைய நிலைமை தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிமனையில் நடைபெற்றது. தெற்கு வலயத்தின் கல்விப்பணிப்பாளர் அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெற்ற

கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், ம.தியாகராசா, இ. இந்திரராசா மற்றும் தர்மபால செனிவரத்தின உட்பட பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திக்குழுவின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது அண்மைக் காலங்களில் பாடசாலையில் நடைபெற்ற மாணவர்களுக்கிடையிலான கைகலப்புகள், நிர்வாக சிக்கல்கள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தேசிய பாடசாலையென்ற வகையில் இது தொடர்பாக மத்திய கல்வி அமைச்சருடன் தான் கலந்துரையாடியதாகவும் பாடசாலையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக் கூறியதாகவும் இதுதொடர்பில் கோரிக்கை கடிதமொன்று மத்திய அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த மாகாண கல்வி அமைச்சர் தேசிய பாடசாலையின் நிர்வாகம் மத்திய அரசின் கீழ் நேரடியாக வருவதால் பாடசாலையின் களநிலைவரம் தொடர்பில் மாகாண குழுவொன்றை விரைவில் அனுப்பி அதன் அறிக்கையை மத்திய அமைச்சருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இப்பத்திரிகை. இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.